[illegible]

V2:51
N22
176026

172

7- JAN 1922
MADRAS

Y2:51
N22
176026

மௌலானா முஹம்மது

# அலி சகோதரர்கள்

7 - JAN 1922
MADRAS

(இரண்டாம் பாகம்.)

# கராச்சி விஜாரணை

விலை அணா 8.

கே. ஜகதீசன் கம்பெனி
திருவல்லிக்கேணி.

*(All Rights Reserved)*

NOBLE PRESS TRIPLICANE.

923.254
3932
7 JAN 1922
MADRAS

# Publisher's Note

The Second Part has been placed before the public. This comprises the trial and its varicus aspects.

As most of the informations given here are culled out from the newspapers that published them then and there in another language, much care has been bestowed in rendering them in Tamil without losing the spirit though we are conscious that better rendering is possible.

We shall be thankful to the public for any better rendering and suggestion which we shall adopt for our next edition.

We hope the public will accord the same welcome to this as they did to the 1st part.

# Books of the Moment
# (In English)

| | | R. | A. |
|---|---|---|---|
| 1. | Mahatma Gandhi's "Hind Swaraj" | 0 | 8 |
| 2. | Mahatma Gandhi's "Guide to Health" | 1 | 8 |
| 3. | Mahatma Gandhi—A Soul Study | 0 | 8 |
| 4. | Philosophy of action of Lok. Tilak's Gita Rahasya | 2 | 0 |
| 5. | Swaraj—a drama in 5 Acts | 1 | 0 |
| 6. | The Trinity and Wheel—the guiding forces of Swaraj | 0 | 8 |
| 7. | What is sociology? | 0 | 8 |
| 8. | Nicolai Lenin. His life and work | 0 | 12 |
| 9. | Report of Ayurveda Sabha in reply to Govt's. Report on investigations into indigenous drugs | 1 | 0 |

# Books in Telugu

| | | |
|---|---|---|
| 1. | Mahatma Gandhi's "Hindava Swaraj" | 0—10 |
| 2. | Mahatma Gandhi's "Guide to Health" | 0—8 |
| 3. | Swarajya Gitamulu | 0—3 |
| 4. | Swarajyame Saranyamu | 0—3 |
| 5. | Swarajya Chakramu | 0—1½ |

# சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

---

1. மகாத்மா காந்தியின் "இந்திய சுயராஜ்யம்" விலை 0—12
2. மகாத்மா காந்தியின் 'ஆரோக்கிய வழி' 0—12
3. மகாத்மா காந்தியின் சரித்திரம் 0—8
4. முகமத் அலியின் சரித்திரம் 0—6
5. கராச்சி விசாரணை— தலைவர்கள் கட்டுண்டது 0—8
6. லோகமான்ய திலகரின்— சுயராஜ்யோபதேசம் 0—6
7. லாலா லஜபதிராய் ஜீவிய சரித்திரம் 0—6

---

7 - JAN 1922

# அத்தியாயம். 1

## வால்ட்டேரில் கைது செய்யப்பட்டது.

ஒத்துழையாமை என்னும் விஷயத்துக்கு மூல காரணரான மகாத்மா காந்தியுடன் மௌலானா முகம்மது அலியும், அவரது பத்தினியும், மௌலானா அஸாத் ஸுபானியும் 1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13-ம் தேதியன்று கல்குத்தாவை விட்டு சென்னப்பட்டணம் நோக்கி புறப்பட்டார்கள். 14-ம் தேதி மாலை இரண்டரை மணிக்கு இவர்கள் வால்ட்டேர் வந்து சேர்ந்தார்கள். வண்டி ஸ்டேஷனுக்குள் நுழைவதன் முன்னரே பிளாட்பாரத்தில் ராணுவ சேவகர்கள் நிறுத்திவைத்திருந்தது தெரிந்தது. பல பிரமுக தலைவர்கள் கைது செய்யப்படுவது நிச்சயம் என்று இந்தியர்களுக்கு கொஞ்சகால முன்முதல் தெரிந்த விஷயம். மௌலானா முகம்மது அலியாவது மகாத்மா காந்தியாவது அல்லது இருவருமாவது கைது செய்யப்படுவார்கள் என்று அங்குள்ள பல ஜனங்களும் எண்ணி கலங்கி நின்றார்கள்.

அப்போது முகம்மது அலி தனது வண்டியில் நன்ருக தூங்கிக்கொண்டிருந்தார். அங்குள்ள ஒருவர் முகம்மது அலியை எழுப்பி கைது செய்யப்படும் காலம் அணுகியதென்று தெரிவித்தார். வண்டியும் ஸ்டேஷனில் வந்து நின்றது. அங்குள்ள இந்திய ஜனங்கள் எல்லோரும் இவர்களது வண்டியில் பார்த்து வந்தனமளித்து இவர்கள் சற்று வெளியில் வந்து கொஞ்சம் உபதேசம் செய்ய வேணுமென்று வெகுவாய் கேட்டுக் கொண்டார்கள். மகாத்மாவும் மௌலானுவும் வண்டியை விட்டிறங்கினுர்கள்.

கொஞ்ச தூரம் நடக்கவே ஒரு அதிகாரவர்க்கத்து உத்யோகஸ்தர் முகம்மது அலியை நிறுத்தி ஒரு பிடி வாரண்டை காட்டினுர். அது மகாத்மாவுக்கு வாசித்து காட்டப்பட்டது. அதில் முகம்மது அலியை கைது செய்யவும் கிரிமினல் பு. கோடு 107, 108, பிரிவுகள்படி என் முகம்மது அலி அமைதியைக் காக்குமாறு நன்னடக்கை ஒரு வருஷத்துக்கு ஜாமீன் கொடுக்கக் கூடாது என்று காரணம் தெரிவிக்குமாறு கண்டிருந்தது. முகம்மது அலி அவ்வுத்தியோகஸ்தர் பின் சென்ருர். அவரது பீகம்ஸாகீபாவும், அவரது காரியங்களை மேல் பார்த்து வந்த மிஸ்டர் ஹயத்தும் கொஞ்ச

நேரம் முகம்மது அலியுடன் பேசும் அனுமதி பெற்று பேசி உடனே வண்டி புறப்படுவதற்குள் வண்டியேற திரும்பிவிட்டார்கள்.

இதற்குள் மகாத்மா காந்தியும் அவ்விடம் கூடி யிருந்த ஜனங்கள் களிக்குமாறு அவர்களது கடமையை யும், ஸ்வதேச ஆடைகள்மட்டும் பூணும்படியான விர தம் அனுஷ்டிக்கும் அவசியத்தையும், இந்து முஸ்லிம் ஐக்கியத்தின் இன்றியமையாத தன்மையையும் பற்றி பிரசங்கித்து திரும்பினர். முகம்மது அலியைப்பார்த்து அவருடன் இரண்டொரு வார்த்தை பேசுவதற்கு மகாத்மாகாந்தி அனுமதி கேட்டும் கொடுக்கவில்லை.

உடனே வண்டியில் ஏறியதும் பல இடங்களுக் கும் சென்னப்பட்டணத்துக்கும் இது விஷயங்களெல் லாம் விஸ்தரித்து தந்திகள் கொடுத்தார். ஆனல் அத் தந்திகள் அதிகாரிகளால் கொடுக்கப்படாமல் தடை யில் நிறுத்தி வைக்கப்பட்டது.

இங்கு முகம்மது அலியின் பீகம் சாகிபாவைப் பற்றி ஒரு வார்த்தை கூறவேண்டியது நமது கடமை யாகும். தனது பர்த்தாவை சுயேச்சை யில்லாமல் கைது செய்துவைத்த காலத்தும் அந்த அம்மாள் அவ

ரிடம் போய் இவ்வாறு தேச விஷயமாக உழைத்த தன் கைம்மாறு கிடைத்ததற்கு சந்தோஷங் கொண்டார். அவருக்கு தன் விஷயமாக யாதொரு கவலேயும் வேண்டாமென்றும் கடவுள் தன்னேயும் அவரையும் கைவிடாது காப்பாத்துவார் என்றும் அவர் செய்துவரும் ஊழியம் கடவுளுக்கு ஒத்ததாகவும் தேசத்து க்ஷேமத்துக்காகவும் இருப்பதால் ஜயம் உண்டாகும் என்றும் கூறி உடனே வண்டி ஏறி பட்டணம் வந்தார்கள்.

தன்னே கைது செய்ததும் முகம்மது அலி எல்லோரும் காங்கிரஸ் வருதிக்கடங்கி அதன் நிபந்தனேப்படி நடந்துவரும்படிக்கும் இந்து மகம்மதிய ஐக்கியம் நன்ருய் உண்டாகி வளர்வதற்கும், அஹிம்ஸையை நாடி ஸ்வதேசியை கைக்கொள்ளும்படிக்கும் தான் வேண்டிக்கொள்வதாகவும் இத்தேசம் ஸ்வயேச்சை அடைந்த பின்னர்தான் விடுதலேயடைய தன் இஷ்டமென்றும் தெரிவித்திருக்கிருர்.

கைது செய்யப்பட்டபோது எங்கு எப்போது அவர் மீது உள்ளதாய் ஏற்படுத்தி யிருக்கும் குற்றம் விசாரணே யாகுமென்றும் ஒருவருக்கும் தெரியவில்லே

# அத்தியாயம். 2

## இவரது இஷ்டர்களின் நிலைமை.

1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 19-ம் தேதி வெளிவந்த பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்ட முக்கிய ஸம்பவங்களை எல்லோரும் மறக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறோம்.

ஸிம்லாவிலிருந்து அஸோஸியேட்டட்பிரஸ் மூலம் வந்த தந்தியொன்றால் முகமத்அலி ஷௌகத் அலி டாக்டர் கிச்லு (Dr. Kitchlew) இவர்கள் மூவரும் ராஜாங்கத்து சேனைகளின் ராஜவிச்வாஸத்தை கெடுத்த குற்றத்துக்கு கைது செய்யப்பட்டார்களென்றும் கராச்சி (Karachi)க்கு அவர்களை கொண்டுவந்து அரசாங்கத்தார் விசாரணை செய்யப் போவதாயும் தெரியவந்தது.

அத்துடன் பீர்குலாம் மஜதீத் மௌல்வி, ஹாசன் அஹமத் "ஸ்ரீ சங்கராசார்யா என்று தன்னை சொல்லிக் கொள்ளும் ஒரு ஹிந்து" (Pir Ghulam Mujadid, Moulvi Hasan Ahmed, 'A Hindu calling himself Sri Sankaracharya') மூன்று பேர்கள் மீது

பிடி வாரண்டுகள் பிறப்பிக்கப் பட்டிருப்பதாயும் ஒரு தந்தி மூலம் தெரிய வந்தது.

இவர்கள் பேரில் யாதுகுற்ற மென்றால் இவர்களும் ஸகல இந்திய கிலாபத் ஜனக்கூட்டம் (The All India Khilaphat Conference) காராச்சியில் கூடின காலத்தில் இரண்டாவது தீர்மானத்தை ஆமோதித்து ஆதரித்தார்கள் என்பதுதான்.

இவ்வாறு சகலஇந்தியர்கள் மனதிலும் இத்தகைய பெரிய தலைவர்களை இச்சமயம் கைது செய்து விசாரணை செய்வது இன்னும் கிளர்ச்சிக்குக் காரணமாக அதிகார வர்க்கத்தினர் செய்வது சரியில்லை என்று எண்ணம் உதித்த போதிலும், கைது செய்யப்படும் கௌரவம் அடையாத மற்றத்தலைவர்களும் ஒவ்வொரு கூட்டத்திலும் அவரவர் இடங்களிலிருந்து அஹிம்ஸா தர்மத்தின் மாக்ஷிமையையும் ஒத்துழையாமையின் பலத்தையும் எடுத்துச் சொல்லி வந்ததால் சகல ஜனங்களும் ஒவ்வொரு ஊரிலும் கூட்டங்கள்கூடி கைது செய்யப்பட்டவர்கள் இந்தியாவின் க்ஷேமத்துக்காக அவஸ்தைப் படுகிறார்களென்றும் அதினால் அவர்களை வெகுவாய்க் கொண்டாடுகிறதாகவும் தீர்மானங்கள் செய்யப் பட்டன.

ஜனங்களின் மனநிலைமை யிவ்வாறு இருக்க, மௌலானா முகம்மத்அலியின் தர்மபத்தினியும் தாயாரும் சேர்ந்து ஸ்வதேசியத்தின் பெருமையையும் கதர் உடுப்பு உடுத்தவேண்டியதன் அவசியத்தையும் பல வாறுரைத்து அங்கோரா தேசத்தில் கஷ்டப்படும் முகம்மதிய சகோதரர்களுக்கு உதவிபுரியுமாறு துகைகளும் வசூலித்து வந்தார்கள்.

பல ஆங்கில இந்திய பேப்பர்களும் ஆங்கில இந்தியரின் பெருமை யென்னும் வலைக்குள் உட்பட்டிருக்கிற இந்திய பத்திரிகைகளும் கூட கைது செய்யப் பட்டவர்களை தலைவர்கள் என்று ஜனங்கள் கருதவில்லை யென்றும், இவர்களை கைது செய்யப் பட்டதால் யாதொரு குழப்பமும் அமைதிக் குறைவும் இல்லாததால் ஜனங்கள் நல்ல புத்தி யடைந்து வந்து விட்டார்கள் என்றும் கூறின!

அது எப்படி இருப்பினும் அப்போது அமைதி யிருந்துவந்ததற்கு காரணம் நமது மகாத்மா காந்தியடிகள் ஊர்ஊராய்ச் சென்ற விடமெல்லாம் அமைதியா யிருக்க வேண்டுமென்று உபதேசம் செய்ததும், மற்றுள்ள இடங்களில் ஆந்தர தேசபக்தர்களும், மற்ற தலைவர்களான பண்டிட் மோதிலால் நேருவும், லாலா

லஜபதிராயும், சித்தரஞ்சன தாஸரவர்களும் (Pundit Motilal Nehru, Lala Lajapat Rai, C. R. Das) காந்தி யடிகளைப்போலவே உபதேசம் செய்ததாலே தான் என்று நிச்சயமாய்க் கூறலாம்.

இங்கு நமது முகம்மத் அலியின் சகோதரர் மௌலானா ஷௌகத் அலியை கைது செய்யப்பட்ட விதத்தை சற்று குறிப்பாய் கூறவேண்டுவது அவசிய மாகும்.

16-9-1921 காலை 2-10-மணிக்கு இவர் கைது செய்யப்பட்டார். முன் இரவில் அவர் ஜாகை வைத்திருந்த பிரதான கிலாபத் ஆபீஸுக்கு மாதக் (Mhadack) என்னும் இடத்திலிருந்து வெகு நேரமான பின் வந்து சயனிக்க ஆரம்பித்தார். நடுநிசி 1 30-க்கு போலீஸ் டிப்டி கமிஷனரால் ஒரு பிடி வாரண்டு இவரிடம் கொடுக்கப்பட்டது. அப்போது ஷௌகத் அலி நித்திரையிலிருந்தார். உடனே ஆஷ்பக் அலி (Ashfaq Ali) என்னும் அவரது சிக்ரடரியார் இவரை எழுப்பி வாரண்டு ஸமாச்சாரம் தெரிவித்தார். உடனே ஷௌகத் அலி டிப்டி கமிஷனரை தன்னிடம் வரவழைத்து தான் அவருடன் புறப்பட்டுப்போக தயாரா யிருப்பதாக சொன்னார். இவரது வேலைக்காரன் மூலம்சாமான்

களை சேகரித்து எடுத்துவர 20 நிமிஷம் கொடுக்கப் பட்டது. டிப்டி கமிஷனரும் வேலைக்காரன் இவருடன் வருவதா யிருந்தால் அவனுடைய செலவு ஸ்டீமர் சத் தம் முதலியவைகளுக்கு கவர்ன்மெண்டார் கொடுக்க முடியாதென்று கூறவே அவரிடம் உடனே இவ்வகை செலவுக்காக வேண்டி ரூ. 500 கொடுத்து கணக்கு வைக்கப்பட்டது.

ஷௌகத் அலியும் உடனே ஜபம் செய்து அவ்வி டம் அழுத கண்ணீருடனும் நொந்த மனதுடனும் சூழ்ந்த ஒவ்வொருவருக்கும் தைரிய மொழிகளும் தனது அன்புவாத்ஸல்யம்மிகுந்த ஆசிகளும் கூறிப்புறப் பட்டார். வெளியில்மோட்டார்காருடன் காத்துக்கொண் டிருந்த நான்கு ஆங்கில உத்தியோகஸ்தர்களுடன் அந் தகாரிலேறி புறப்பட்டார். "அல்லாஹோ அக்பர்" என் னும் சப்தம் அவ்விரவு நேரத்தில் எங்கும் ஒலித்தது. மோட்டார்கார் வேகத்தில் போனதாலும் எவ்விடம் இவர்கள் செல்லுகிறார்கள் என்று தெரியாததாலும் வேலைக்காரன் பின் விடப்பட்டான். உடனே போலீசா ரின் உதவியால் வேலைக்காரனும் தயாராக இருந்த புகைக்கப்பலுக்குகொண்டுவிடப்பட்ட பிறகுஷௌகத் அலியும் கராச்சிக்கு கொண்டு போகப்பட்டார்.

வால்ட்டேரில் கைதுசெய்யப்பட்டு நல்ல அமைதிக்கு ஜாமீன்கேஸ் எப்படியாயிற்று என்று நமக்கு தெரியவில்லை. அவர் கைது செய்யப்பட்ட பிறகு பம்பாய் கவர்ன்மெண்டிலிருந்து வந்த பிடிவாரண்டால் மறுபடி போலீஸ் காப்புடனே முகம்மத் அலியும் வடமுக நாடி தனிவண்டியிலேற்றப்பட்டு காசி சமீப முள்ள மோகல் சேராய் (Mogalsarai) வழியாக கராச்சிக்கு கொண்டு போகப்பட்டார். இவர் இவ்வாறு தனிமையாக முன் தகவல் இல்லாமல் கொண்டு போகப்பட்ட போதிலும் ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷனிலும் ஜனங்கள் எவ்விதமோ அறிந்து ஏராளமாக கூட்டம் கூடி இவரை தரிசனம் செய்ய எண்ணி வந்தார்கள். எந்த விடத்திலும் "முகம்மத் அலிக்கு ஜேய்! மகாத்மா காந்திக்கு ஜேய்! ஸ்வராஜ்கி ஜேய்!!" என்ற கோஷமாகவே யிருந்தது.

இவ்வாறு கராச்சிக்கு கொண்டு போனவுடன் மேற் சொன்னவர்களுடன் இன்னும் இரண்டு பேர்களும் கைது செய்யப்பட்டு ஆகஎழுவர்களும் ஜயிலில் இருந்து விசாரணையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

# அத்தியாயம். 3

## கவர்ன்மென்டின் ஸ்ரத்தை, ஸ்ரமம், முன்ஜாக்கிரதை.

இவர்கள் விஜாரணை பெரிய விஷயமென்றும் இதில் வெகு ஜாக்கிரதையுடன் ஒழுங்கு செய்ய வேணுமென்றும் கவர்ன்மெண்டாருக்கும் தோன்றியது.

அப்போது ஒவ்வொரு தலைவரையும் கைது செய்யப் பட்ட விதத்திலும் அதிகாரவர்க்கத்தினர் கைது செய்து கராச்சிக்கு கொண்டு வந்து சேர்க்கவும் எடுத்துக்கொண்ட ஸ்ரத்தை, ஸ்ரமம், முன்ஜாக்கிரதை இவைகளுக்கு அளவில்லை. போர்வீர்களையும் ராணுவ சேவகர்களையும் அங்கங்கே வைத்து தயாராய் இருந்தார்கள். இதை எல்லாம் கேள்விப் பட்ட ஷௌகத்அலி மனம் நொந்து " ஐயோ. எங்கள் விஷயமாக இவ்வளவு ஸ்ரமமும் பணச்செலவும் இவ்விராஜாங்கத்தாருக்கு வேண்டாமே! ஐயோபாவம்! எனக்காவது என்தம்பி

முகம்மது அலிக்காவது ஒருசிறிய காய்தம் வரைந்திருப்பார்களானால் அவர்கள் இஷ்டப்படி உடனே அவர்கள் சொல்லும் இடத்துக்கு நாங்களே யாதொரு கஷ்டமில்லாமல் வந்திருப்போமே!'' என்று சொன்னார்.

இதை எல்லாம் பார்க்குங் காலத்தில் ஏதோ ஒரு அவசரமாக இந்த விசாரணை நடத்த வேணுமென்று தீர்மானித்து அமுல் நடந்ததாகவே எண்ண ஏற்படுகிறது. பம்பாய் கவர்ன்மெண்டில் எக்ஸிக்யூட் கௌன்ஸிலில் இந்திய மெம்பர்களாக விருக்கும் ஸர்இப்றகீம் ருஹிம் உத்தல்லா, ஸர்சீமன்லால் ஸேதலவட் (Sir Ibrahim Rahimtulla, Sir Chiman Lal Setalvad) இவர்கள் கூட பம்பாய் கவர்னர் யோசனை ஸபையில் அலிசகோதரர்கள் மேல் கேஸ்நடத்துவது சரியானதில்லை என்று வேண்டியவரை ஆக்ஷேபித் திருப்பதாக தக்க ஆதாரத்துடன் தெரிய வருகிறது.

இது இவ்வாறிருக்க கராச்சியில் கைது செய்யப்பட்ட தலைவர்களை பார்ப்பதற்கும் பேசுவதற்கும், விசாரணை காலத்தில் கராச்சியில் பொதுவாய் ஜனங்கள் ரஸ்தாக்களில் நடந்துபோவதற்கும், பொது ஸ்தலமான

கச்சேரியில் (Law Court) போய் வருவதற்கும் ஏற்பட்டிருந்த நிபந்தனைகளைப்பார்த்தால் வெகு வியப்புக்கிடமாயிருக்கின்றது.

கராச்சி ஜில்லா மாஜிஸ்டரேட் செப்டம்பர் மாதம் 18-ம் தேதி முதல் ஒரு மாதம் வரைக்கும் கராச்சி முனிசிபாலிடி கென்டோன்மென்டு எல்லைகளுக்குள் ஒருவரும்சாதாரணமான ஊன்றுகோல் குச்சியைதவிர்த்து வேறு குச்சிகள் தடிகள் கொண்டு பிடித்தும் செல்லக்கூடாதென்றும், பல வகுப்பினர்களுக்குள் விரோதமுண்டு பண்ணக் கூடியதும், அல்லது குற்ற சம்பவத்துக்கு ஆஸ்பதமாகக் கூடியதும், அல்லது ஜன அமைதியை தடுக்கக் கூடியதும், அல்லது சட்ட அதிகாரத்துக்கும் அதன் கன்னியத்துக்கும் விரோதமா யிருக்கக் கூடியதான எந்தவித கல்கள், கவுண்டிகளையாவது யாரும் சேர்க்கக் கூடாதென்றும், எவ்வித சப்தம் பகிரங்கமாக செய்யவும், பாட்டு கள் பாடவும் அல்லது பேச்சுகள் பேசவும் கூடாதென்றும் உத்திரவு செய்தார்.

இன்னும், மேற்கண்ட எல்லைக்குள் பொது ரஸ்தாக்களிலும் அடிப்பாதைகளிலும் போக்குவரத்தா

யுள்ள யாவர்களும் யாராவது போலீஸ் உத்தியோகஸ் தன் சொல்லும் மார்க்கமாகவும் விதமாகவுந்தான் போக வேண்டுமென்றும், அந்த இடங்களில் நின்று வண்டிகளுக்கும் மற்றவைகளுக்கும் தடையாய் இருக்கக் கூடாதென்றும், டிஸ்டிரிகட்டு போலீஸ் சூபிரண்டன்டு இது விஷயமாய் எது பிறப்பித்தாலும் அந்த ஒழுங்கின்படி நடந்துவர வேணுமென்றும் இவ்விதத்தில் எவ்விஷயத்தில் மறுதளித்தாலும் விரோதமாக நடந்தாலும் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்படுவார்களென்றும் உத்திரவு பிறந்தது.

செப்டம்பர் மாதம் 21-ம் தேதி தலைவர்கள் மீது உண்டான வழக்கை பார்க்க விரும்புவோர்கள் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனுச்செய்து டிக்கெட்டு பெற்றுதான் கச்சேரிக்குப் போய் விசாரணையை பார்க்கலாமென்றும் வேண்டுமான போலீஸ் பந்தோபஸ்துடன் ராணுவச் சேவகர்களையும் வைத்துக்கொண்டு பந்தோபஸ்து செய்யப்படும் என்றும், கைதிகளிடம் யாரும் நெருங்கவாவது பேசவாவது மாலையிடவாவது கூடாதென்றும், இன்னும் பலவாறு எழுதப்பட்ட நோட்டீசுகள் பிறப்பிக்கப்பட்டன. இத்தனை நிபந்தனைகள் இருந்தபடியால் அவி சகோதரர்களுக்கு

வெகு வேண்டிய பந்து மித்திரர்கள் கராச்சிக்கு சென்றிருந்தாலும் கூட அதிகாரிகளின் அனுமதிபெற்று அவர்களைப்பார்த்துப்பேச மனமிடங் கொடாமல் அவர்களைக்காணாமலும் விசாரணையை பாராமலும் இருந்து விட்டார்கள்.

இவ்வளவு சாவதானமும் முன்னெச்சரிப்பும் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்ட விசாரணை அம் மாதம் 26-ம் தேதிக்கு பிரதம விசாரணைக்கு வந்தது.

---

# அத்தியாயம். 4

# இக்காலத்தில் நிகழ்ந்த ஸம்பவங்கள்.

## 1. முகமத் அலியின் வேண்டுகோள்.

செப்டம்பர் மாதம் 14-ம் தேதி வால்டேரில் கைது செய்யப்பட்ட பிறகு தனது ஸொந்த காரியங்களை மேல் பார்த்துவந்த மிஸ்டர், எச். எம். ஹயத், (Mr. H. M. Hayat) என்பவர் மூலம் இப்பரத கண்டத்திலுள்ள தனது ஹிந்து முகமதிய நேசர்களுக்கும் இஷ்டர்களுக்கும் அடியிற் கண்ட தனது வேண்டுகோளை மௌலானா முகம்மது அலி தெரிவிக்குமாறு வேண்டிக் கொண்டார். அதாவது:—

Whosoever has any love or regard for me must take my arrest in a calm and peaceful spirit and give expression to that love and regard in two, and only two, ways: Firstly,

by contributing all that a Mussalman possibly can towards the Smyrna Relief and Angora Munitions Fund ; and secondly, to discard all foreign clothes and wear pure Swadeshi.

I trust my arrest will give greater Courage and hope to my friends and followers who, I expect would carry on the programme of Non-violent Non-co-operation with tenfold zeal, energy and firmness, undeterred by fear of repression but hopeful of God Almighty's choicest blessings in this righteous cause. Insha Allah. Victory is sure and is in sight.

"என்மீது அன்பும் கண்ணியதையும் வைத்திருக்கும் யாரும் நான் கைது செய்யப்பட்ட விஷயமாய் சாந்தத்துடனும் அமைதியுடனும் இருக்க வேணுமென்றும், அவ்வன்புக்கும் கண்ணியதைக்கும் அறிகுறியாக அடியிற்கண்ட இவ்விரண்டே விஷயங்களில் தங்கள் குறிப்பைச் செலுத்தவும் வேண்டுகிறேன்: முதலாவது, ஸிமர்ணா அவஸ்தை நிவர்த்திக்காகவும், அங்கோரா யுத்தக்கருவி செய்யும் விஷய நிதிக்காகவும்

ஒவ்வொரு முஸல்மானும் தன்னால் கூடிய அளவு திரவிய ஸகாயம் செய்தல் வேண்டும். இரண்டாவது, அந்நிய தேசத் துணிகள் பாவையும் பகிஷ்காரம் செய்து மாசற்ற ஸ்வதேச உடுப்பை அணியவேண்டும்.

நான் கைது செய்யப்பட்ட விஷயத்தால் எனது மித்திரர்களுக்கும் என்னை அனுசரித்தவர்களுக்கும் அதிகமான தைரியமும் நம்பிக்கையும் உண்டாகுமென்றும் எண்ணுகிறேன். அஹிம்ஸா தர்மத்துடன் கலந்து ஒத்துழையாமை எனும் உயர்ந்த விஷயத்தில் இன்னும் பதின்மடங்கு ஊக்கத்துடனும் ஈடுபட்டு நடந்து வர வேணுமென்றும், இந்நீதி முறையுள்ள காரியத்தில் சித்திபெற ஸர்வ வல்லமையுள்ள பரம்பொருளின் கிருபையும் அனுக்கிரகமும் உண்டென்ற நம்பிக்கையுடன் இருந்து, எத்தகை அடக்குமுறை குறுக்கிட்டாலும் பயமற்று மன உறுதியுடன் முயற்சியெடுக்க வேணுமென்றும் எதிர்பார்க்கிறேன். எல்லாம் கடவுளின் இஷ்டம். ஜயமென்பது நிச்சயம். அது சமீபம் அணுகியது.”

இவ்வாறு அன்பு நிறைந்த வேண்டுகோள் முகமத் அலியிடமல்லாது வேறு எவண் எதிர்பார்க்க முடி-

யும். இதையே திரும்பத் திரும்ப யாவர்க்கும் தெரி விக்குமாறு மிஸ்டர் ஹயத்திடம் சொன்னார். பிறகு அலிகார் நகரில் தனது இஷ்ட தேவதைபோல் விளங் கும் முஸ்லிம் ஜாதீய கலாசாலை (National Muslim University) உத்யோகஸ்தர்களுக்கும் மாணாக்கர் களுக்கும் தனது பூரணமான அன்பை தெரிவிக்கவும் சொன்னார்.

தனது பத்னியை நோக்கி "காதலியே, நான் அலிகார் கல்லூரியை என் சொந்தமென்றும் அதிற் கற்றுவரும் மாணாகார்கள் என் குழந்தைகளென்றும் எண்ணி யிருந்தபடி நான் கட்டுண்ட காலத்தில் அவர் கள் நினைவு என்னை அடைதலால் என் செய்வேன்' என்று சற்று கலக்கமுற, அம்மாதர் திலகம் கூறிய தாவது "பிராணபதி, சற்றும் கலக்கம் வேண்டாம். என் ஆவி யிருக்குமளவும் இனிமேல் அலிகார் என் னூராக எண்ணி அங்கு நம் குழந்தைகளுடன் சென்று அலிகார் கல்லூரியின் மாணாக்கர்களும் என் குழந்தைக ளெனக் கருதிப் பேணிப் பெருமையடைவேன். தேசிய உழைப்பு நிமித்தம் நான் எவ்விடம்போனாலும் என்

குழந்தைகளை அவடமே வைத்துவிட்டுத் திரும்பி அவடமேவந்து சேருவேன். இதை எண்ணி மனக் கிலேசம் வேண்டாம்" என்று தேற்றினள்.

## (2) டில்லியில் உலேமாக்களின் கூட்டம்.

முகம்மது அலி போன்று முகமதிய ஜனங்களால் போற்றிப் புகழ்ந்து கொண்டாடப்படும் முகமதிய தலைவர்களை ஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக கைது செய்ததும், இவ்விந்தியாவில் உள்ள 50 உலேமாக்களும் சேர்ந்து ஒத்து பயிரங்கப்படுத்திய பட்வாக்களை கவர்ன்மெண்டார் பரிமுதல் செய்ததும் நினைக்க நினைக்க இஸ்லாமில் அபிமானமிருக்கும் யாருக்குமே வருத்தம் தரக் கூடியதே. இவ்விரண்டு சம்பவங்களுக்கு யாது செய்யலாம் என்று ஆலோசிக்கவும், எக்காரியம் குற்றம் என்று கருதப்பட்டு தலைவர்கள் கட்டுண்டார்களோ அக்காரியத்தையே ஒவ்வொரு முஸல்மானும் செய்து நியாய வரம்புக்குட்பட்ட கீழ்ப்படியாமை (Civil disobedience) என்னும் முறையை கைக்கொள்ளும்படி வேண்டவும், இந்தியாவிலுள்ள சகல உலேமாக்களும் சேர்ந்த சபையான

ஜமைத்துல் உலேமா (Jamaitul-Ulema) செப்டம்பர் மாதம் 21-ம் தேதி டில்லியில் கூடிற்று. ஹகீம் அஜ்மால்கான் (Hakim Ajmalkhan) அக்கிராசனம் வகித்தார். இந்தியாவிலுள்ள பற்பல பாகங்களிலிருந்தும் மௌலானுக்கள் வந்தார்கள்.

முகமதிய தலைவரான மௌலானு முகம்மத்அலி செய்தது ஒரு பெரும் மதத்துக் குட்பட்ட சமாசாரம் என்றும், கராச்சியில் கூடின கிலாபத் கான்பரன்ஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இஸ்லாம் மதத்தின் ஆணி போன்றிருக்கும் தேவகட்டளைகளில் ஒன்று என்றும், சென்ற 1300 வருஷங்களாக யாவராலும் ஒரே மாதிரியாயும் நிராட் சேபணையாயும் செய்து வருவதற்குறிய தேவகற்பனைகளின் ஆதாரமான பட்வாவை டில்லி மாகாணத்து சீவ் கமிஷணராலும் இதர மாகாணங்களின் அதிகாரிகளாலும் பறிமுதல் செய்தது மூலம் மதத்தில் சர்க்கார் தலையிடுவதாகத் தெரிகிறதென்றும், இந்த சர்க்காருக்கும் வேறு யார்க்கும் தங்கள் மதக்கோட்பாட்டையும் தேவகற்பனையும் சொல்லி மனனம் செய்து பரவச் செய்வதை தடை செய்ய எவ்வித பாத்தியதையும் அதிகாரமும் இல்லையென்றும், மீறி தலையிடும் பக்ஷத்தில் அதற்கு இடங்கொடுக்க

முடியா தென்றும், பரிமுதல் உத்திரவை யாவரும் கருதாமல் முன்போலவே பட்வாவை பரவச் செய்வது தான் முஸல்மானின் கடமை என்றும், எல்லா முக மதியர்களும் இம்மத சம்பந்தமான கடமையில் எதை யும் லக்ஷியம் செய்யாது முன்வந்து முகமத்அலி வகையருமீது குற்றமென்று கவர்ன் மெண்டார் கரு தும் கராச்சி தீர்மானத்தை மருபடியும் மருபடியும் வேத வாக்கென சொல்லி பகிரங்கம் செய்யவேணு மென்றும், இஸ்லாம் மதக்கோட்பாட்டில் கவர்ன் மெண்டார் எவ் வளவு தான் தலையிடுகிறார் களென்று பார்க்க வேணு மென்றும் ஒரு மனப்பாடுடன் தீர்மானங்கள் செய்து நிறைவேற்றினார்கள்.

## (3) மத்திய கிலாபத் கம்மிட்டியார் நிலை

இக்கமிட்டியாரும் உடனே டில்லியில் கூடி அதில் பற்பல விடங்களிலிருந்து வந்து இவ்விஷய ஆராச்சி செய்த மகான்கள் இந்தியர்களின் நிலைமையையும், முகம்மதிய தலைவர்களின் கதியையும், கவர்ன் மெண் டின் காரியத்தையும், இஸ்லாமின் கட்டளையையும் சிந்

தித்து மேலே குறித்த உலேமாவின் தீர்மானம் போலவே தாங்களும் தீர்மானித்து நிறைவேற்றினர்கள்.

## (4.) பரதகண்டத்து நிலே.

இந்திய மக்களின் தலைவர்களான இவ்வெழுவரும் ஜயிலில் அடைக்கப்பட்டு எப்போது தங்கள் மீது கொண்டு வரப்பட்ட விவகாரம் விசாரணைக்கு வருமென்று எதிர்பார்த்திருந்து வருவதை நினைத்து இந்திய ஜனங்கள் எல்லோரும் ஒன்று மறியாது இன்னும் என்ன நடக்குமோ என்று எண்ணினர். முகம்மது அலியின் மேல் வந்த குற்றம் யாதென அறிந்தார் இவர்கள் எண்ணத்தில் முகம்மது அலியும் மற்றறுவரும் செய்ததாக ஏற்பட்டுள்ளதற்கு இவ்வளவு ஊக்கத்துடனும் பறபறப்புடனும் நடத்த வேண்டிய கேசாக ஆகுமாறு தோன்றவில்லை. ஒவ்வொரு ஊரிலும் இந்த விசாரணையைப் பற்றியும் தலைவர்கள் செய்ததாக சொல்லும் குற்றத்தைப் பற்றியும் ஜனங்கள் உசாவ ஆரம்பித்தனர்கள். இது ஒவ்வொரு மனிதனும் இயற்கைச் சுபாவத்தில் செய்யக் கூடிய காரியம் குற்றமாகக் கருதப் பட்டதை சிந்தித்து வியப்படைந்தார்கள். முகம்

மத்அலி வகையரு எதிரிகள் தீர்மானித்தார்களென்று அதிகாரிகள் சொல்லுகிறார்களோ அதே தீர்மானத்தை ஏன் தாங்களும் கூட்டங்கள்கூடி பகிரங்கமாய் சொல்லிப் பார்க்கக் கூடாது என்ற நினைப்புடைந்தார்கள். அந்தந்த ஊர்களில் பொதுக் கூட்டங்கூடி மேலே சொன்ன கராச்சி தீர்மானத்தை உள்ளதை உள்ளபடி வார்த்தை வார்த்தையாக பிரித்து பிரித்து ஒவ்வொரு ஜனக்கூட்டத்தில் இருந்த அக்கிராசனாதிபதி முதல் அங்குள்ள யாவரும் முறைமுறையாகக் கூறி தீர்மானத்தை அங்கீகரித்தார்கள். இவ்வாறு கூட்டங் கூடி தீர்மானம் செய்த ஊர்கள் கணக்குக் கடங்காது. அதிகார வர்க்கத்தார் செய்யும் காரியங்களால் உண்டாகும் பல நன்மைகளில் இவ்வாறு ஜனங்கள் செய்ய ஏற்பட்டதும் ஒரு படிப்பினையன்றோ.

## (5) ஸ்ரீ சங்கராச்சாரியார்.

ஒரு அரசாங்கத்துப் பிரஜைகள் யாரையும் அவ் வரசாங்கத்து வேலைக்காரர்கள் கவுரவமாகவும் சமமாகவும் நடத்தியும் மரியாதை காட்டியும் வந்தால்தான், அந்த அரசாங்கத்துக்கு கவுரவம் மரியாதை ஏற்படும் என்பது சரித்திர சாஸ்திர பிரதம பாடம். எந்தப் பிரஜைகளிடம் மரியாதையற்று நடந்

தும், முக்கியமாக பல ஜனங்கள் பெரிய தலைவரென்றும் குருவென்றும் பயபக்தியுடன் பாவிக்கப்படும் மக்களை அவ்வேலைக்காரர்கள் ஏளனமாயாவது அவமரியாதையுடனாவது நடந்தும் வந்த தேசங்களை நடாத்திவந்த அதிகாரப்பான்மை குன்றி சீர்குலைந்து போனதை மேல் நாட்டுகளிலும் கீழ் நாட்டுகளிலும் நாம் சரித்திர வாயிலாக அறியவில்லையா.

ஏற்கனவே நாம் அதிகார வர்க்கத்தாரால் கைது செய்யப்பட்ட நபர்களில் "ஸ்ரீ சங்கர ஆசாரியர் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் ஒரு ஹிந்து" வென்று ஒருவரை குறிப்பிட்டதாக தெரிவித்தோம். இது விஷயத்தில் நமது ஆக்ஷி முறைக்கு பொறுப்பாயுள்ளவர் நடந்து கொண்டது முற்றும் ஆக்ஷேபிக்கத் தக்கதே. இவர்கள் இவ்வாறு அறிவித்ததன பயனாக இவ்வாக்ஷி முறையின் அதிகார வர்க்கத்தின் ஒரு வேலைக்காரரான பம்பாய் 'சமாசாரங்கள் வெளிப்படுத்தும் அதிகாரி' (Director of Information Bombay) சில பத்திரிகைகளுக்கு அடியிற் கண்ட விஷயத்தை அனுப்பி பிரசுரிக்குமாறு எழுதி யனுப்பினர்:—

"A Statement has appeared in the Press that the Sri Sankaracharya of Sharadha Pith has been arrested in connection with the prosecutions instituted by Goverment against certain speakers of the All India Khilafat Conference. The individual actually arrested is one Venkataraman alias Bharati Krishna Thirthji who has assumed the above title."

அதாவது "சகல இந்திய கிலாபத் கான்பிரன்ஸில் பேசிய சிலர்கள் மீது கவர்ன்மெண்டால் தொடுக்கப்பட்ட வழக்குகள் சம்பந்தமாக சாரதாபீட ஸ்ரீ சங்கராசாரியர் கைதுசெய்யப்பட்டதாக பத்திரிகைகளில் ஒரு சங்கதி வெளிவந்திருக்கிறது. உள்ளபடி கைதுசெய்யப்பட்ட அஸாமி மேற்கண்ட பட்டத்தைத் தானே வைத்துக்கொண்ட வெங்கட்டராமன் என்ற பாரதி கிருஷ்ண தீர்த்தஜீ."

இப்படி எழுதியுள்ள இம்மகானுபாவர் எப்போது இந்தபட்டத்தை இவர் வைத்துக்கொண்டார் என்றுவது நிச்சயமாய் அப்பட்டத்துக்கு உடையவர் யார் என்றுவது சொல்லவில்லை. இந்நாட்டில் பற்பல இடங்களில்

வெகு முக்கியமான விஷயங்களின் சமாசாரங்கள் ஜனங்களுக்கு கடமையுடன் தெரிவிக்க வேண்டியவைகள் கோடானு கோடியிருக்க இந்த மதத்தலைவர் எதிரியாக இருக்கிறார் என்ற நிலைமையில் இவ்வதிகாரி இவ்வளவு மரியாதைக்குறைவாக எழுதியிருப்பது மிக அகௌரவமே. இது விஷயத்தைப்பற்றி பல ஜனங்களும் இவ்வெதியை பின்பற்றினோர்களும் வெகுவாய் மனம் நொந்து கூட்டங்கள் கூடி தங்கள் மனவருத்தத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தினார்கள். பம்பாய் கிரானிக்கிள் (The Bombay chronicle) போன்ற சில பத்திரிகைகளும் இவ்வதிகாரியின் கௌரவமற்ற செயலைப்பற்றி கண்டித்தும் எழுதியிருக்கின்றன. அவைகளை இந்த அதிகாரியாவது இந்த அதிகாரி பிரசுரம் செய்தது கவர்ன்மெண்டாரின் சம்மதத்துடனிருக்கும் பக்ஷத்தில் கவர்ன்மெண்டாராவது இச்செயலால் இந்துகளின் மதத்தலைவருக்கு ஒரு அகௌரவம் செய்ததற்கு மனவருத்தம் காட்டினதாக தெரியவில்லை. வாஸ்தவமாக இவர்களுக்கு இதனால் ஏற்படும் அகௌரவம் தெரியாமலிருக்கலாம். மேல் நாட்டிலே முக்கியமாக இங்கிலாந்திலேயுள்ள மதத்தலைவரென்று எண்ணப்படும் கான்டர் பரி அல்லது யார்க்கு என்னும்

நகரங்களின் ஆர்ச்பிஷப்புக்களை (The Archbishops of York and Canterbury) யாராவது இவ்வதிகாரி எழுதியுள்ளது போல எழுதுவாரானால் அவர்கள் கொஞ்சம் அறியலாம். ஆயினும் தொன்று தொட்டு வழக்கமாய் அனுசரித்தபடி இத்தகை சில்லரை விஷயங்களை இந்தியர்கள் கவனிக்காமல் இருப்பது மேன்மையானதே.

---

# அத்தியாயம். 5

## தலைவர்களின் மீதுள்ள குற்றத்துக்கு பிரதம விசாரணை.

கராச்சியில் மிஸ்டர் எஸ். எம். தாலத்தி (Mr. S. M. Talati) என்ற நகர மாஜிஸ்ட்ரேட்டார் முன்பாக காலிக்தின (Khalikdina Hall) கூடமெனும் இடத்தில் இத்தலைவர்கள் மீது கொண்டு வரப்பட்ட வழக்கின் பிரதம விசாரணை 26-9-1921 பகல் 11 மணி முதல் ஆரம்பிக்கப் பட்டது.

குற்றத்தின் அம்சம். 1921ம் வருஷம் ஜுலை மாதம் 8ம்தேதி முதல் 10ம்தேதி முடிவாக கராச்சியில் நடந்தேறிய சகல இந்திய கிலாபத் கான்பரன்ஸில், தற்காலம் பிரிட்டிஷ் ராணுவச் சேனையில் முகம்மதியர் இருந்து வருவதும், சேருவதும், சேரும்படி மற்றவர்களை தூண்டி வருவதும் நியாயமில்லாத காரியமென்றும் இத்தகைய விஷயத்தை ராணுவ சேனையில் இருக்கும் மகம்மதியர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டி

யது ஒவ்வொரு முஸால்மானின் கடமை யென்றும் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்த விஷயமாக ஏற்பட்ட குற்றமே. இந்திய பீனல்கோடு 120 A.(2)- 131, 505 பிரிவுகளின்படி இக்குற்றம் வழக்குக் குள்ளாயது.

குற்றஞ் சாட்டப்பட்டவர்கள். (1) ராம்பூர் வாஸியான முகம்மத் அலி, (2) தேவபந்துவாஸியான மௌல்வி ஹூஸேன் அஹமத் (3) அம்ருதஸரஸ் வாஸியான டாக்டர் ஸரவுடீன் கிச்லு (4) மேதியரி வாஸியானபீர்குலாம் மஜீத் (5) கான்பூர் சேர்ந்த மௌல்வி நிஸார் அஹமத் (6) பாரதி கிருஷ்ண தீர்த்தஜி. என்ற வெங்கட்டரும் (7) ராம்பூர் வாஸியான ஷௌகத் அலி.

கோர்ட்டில் விசாரணை ஆரம்பிக்குங் காலத்தில் சுமார் 500 ஜனங்களுக்கு மேல்டிக்கட்டுகள் ஜில்லா மேஜிஸ்ட்ரேட்டால் கொடுக்கப் பட்டிருந்த போதிலும் உத்துழையாதவர்களில் பெரும்பாலோர் நிபந்தனைகளுக்குட்பட்டுக் கச்சேரிக்கு வரமனம் இல்லாமல் அப்பக்கம் நாடவே யில்லை.

சாக்ஷியம். சர்க்கார் தரப்பில் முதலாவது சாக்ஷியாக கராச்சி ஸிட்டிஸ்டேஷன் போலீஸில் ஜூலை மாதம் வேலை பார்த்து வந்த மிஸ்டர் ஜம்மானு (Mr Jammanah) வை விசாரிக்கப் பட்டது.

இவரே பம்பாய் கவர்ண்மெண்டின் உத்திரவுப்படி பிரியாது செய்தவர். இவர், 1, 6, 7, எதிரிகள் ஜூலை மாதம் 7ம் தேதி கராச்சி வந்ததும், கிலாபத் மகாநாடு 8, 9, 10 தேதிகளில் கூடியதும், அவரவர்கள் எங்கு தங்கினார்களென்றும், தீர்மானம் நடைபெறும் காலம் தான் கூட்டத்தில் இருந்ததும், முகம்மத்அலி மேற்கண்ட தீர்மானத்தை அம்மகாநாட்டில் படித்ததும், இன்னும் எதிரிகள் என்னென்ன செய்தாரென்றும், 1வது எதிரி தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் எழுந்திருக்கும்படி சொல்லி அதை நிறைவேற்றியதாக செய்ததும், அந்தந்த நேரங்களில் அங்குகூடியிருந்த மகாஜனங்களின் ஊக்கம் உற்சாகம் முதலியவையும் உலேமாக்களின் பட்வாக்கள் (Fatwas)தான் பார்த்திருப்பதும், மற்ற விஷயங்களையும் சாங்கோ பாங்கமாய் சாக்ஷியம் கொடுத்தார்.

எதிரிகள் குறுக்கு விசாரணை செய்ய வில்லை. இரண்டாவது சாக்ஷியான முகம்மதுபக்ஸ் (Mahammad Bux) என்பவர் ஸிந்து நாட்டு ஹாலா வென்னும் டிவிஷன் டிப்டிகலெக்டர். இவர் மேற் சொன்ன சாக்ஷியைவிட அதிகமாய்ச் சொன்னதாக தெரிய வில்லை,

பிறகு உழவு போலீஸ் (C. I. D.) ஜமேதார் ஒருவரும், ஹெட் கான்ஸ் டெபிலான முகம்மத் உஸ்மான் கன்னி என்பவரும் விசாரிக்கப்பட்டனர். இவர் எதிரிகள் எங்கு தங்கியிருந்தார்களென்றும் யார் யார் எந்தெந்த வண்டியில் தங்கள் விடுதிக்கு சென்றார்கள் என்றும், நிர்வாக கமிட்டியில் ஷௌகத் அலியின் சப்தத்தைக் கேட்டதாகவும் ஆனால் என்ன சொன்னார் என்று தனக்கு தெரியாதென்றும், முக்கியமாக சொன்னார்.

பிறகு அப்துல் கபூர் ஸதார்கான் (Abdul Guffoor Zadar Khan) என்னும் உழவு போலீசுசப் இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டார். தான் பட்வாவை ஒரு பட்டாணியிட மிருந்து பெற்று தன் எஜமானனை டிஸ்டிரிக்ட்டு சூபிரண்டெண்டுக்கு கொடுத்ததாகவும் சொன்னார்.

பிறகு லக்கத் ஹுஸ்ஸேன் ஸயத் (Lakht Hussain Sayed) என்ற உழவுபோலீசு இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டார். தான் உர்து பாஷையில் பேசுவதை குட்டெழுத்தில் (Shorthand) எழுதத் தேர்ச்சியடைந்தவரென்றும், தான் உர்துவில் முகமத் அலியின் பேச்சை ரிபோர்ட்டில் எடுத்ததாகவும், இன்னின்ன எதிரிகள் இவ்வரிசைக் கிரமத்தில் இன்னின்ன பாஷையில் பேசினரென்றும் சாக்ஷியம் கொடுத்தார்.

எதிரிகளும் குறுக்கு கேள்விகள் கிடையாதென்றார்கள்.

பிறகு அலகபாத்து ஸி. ஐ. டி. சப் இன்ஸ்பெக்டரான கான்பஹதூர்கான் என்ற ஒரு பட்டாணி விசாரிக்கப்பட்டார். இவர் மேற்சொன்ன சாக்ஷிகளை விட புதிதாய் ஒன்றும் சொல்லவில்லை.

இதற்குப் பிறகு கராச்சியில் வெளிவரும் டெய்லி கெஜட் (Daily gazette) டின் உதவி பத்திரிகாசிரியரான மிஸ்டர் பரன்ஸ் (Mr. W, R. Burns) என்பவர் தனது பத்திரிகையில் வெளிவந்த விஷயத்தைக் காட்டிய பிரதியை ஆஜர்செய்தார்.

பிறகு காம்சந்த் ராமலால் (Mr, Karamchand Ramlal) என்றகராச்சி போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டார். இவரும் மேற் சொன்ன சாக்ஷியத்தை விட முக்கியமாய் யாதொன்றும் சொல்லவில்லை.

பிறகு ராணுவ உத்தியோகஸ்தர்கள் விசாரிக்கப் பட்டார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உத்தியோகத்தை விடாமல் இருந்து வருவதாக நியந்தனை கொடுக்கவேணுமென்றும் சண்டை காலத்தில் வேலைக்கு சேர்ந்த சேனைகள் சண்டை கால முடியும் வரையிலும் உழைத்து அதற்குப் பிறகும் 6 மாதம் சேர்ந்திருக்க வேணுமென்றும், சேனையில் சேர்க்கும் விதம் இப்படி என்றும், சேனையில் சேரக் கூடாது என்று அச்சு நோட்டீசுகள் மூலம் பிரசித்தம் செய்யபட்ட சில நோட்டீசுகள் தன்னிடம் வந்தன வென்றும், சொல்லி நோட்டீசுகளை ஆஜரும் செய்தார்.

எதிரிகளும் குறுக்கு கேழ்விகள் கேட்கவில்லை.

இந்தியராணுவ உத்தியோகஸ்தரான ஸுபேதார் மேஜர் ஜயராமஸிங் (Subedar Major Jairam Singh) என்பவர் தனது ராணுவப் படையிலிருந்த

முகம்மதிய உத்தியோகஸ்தர்களுக்கு தபால் மூலம் மேற்கண்ட நோட்டீசுகள் அனுப்பப்பட்ட தாகவும் சொல்லி ஆஜர்செய்தார்.

பிறகு ஸுபேதார் ஆஸிஸுடீன் ஷரவ்வுடீன் ஜாட் (Mr. Azizudin Sharafadin Jat) தான்சில நோட்டீசுகள் பெற்றதாகவும் சொல்லி ஆஜர் செய்தார்.

இன்னும் சில உத்தியோகஸ்தர்கள் விஜாரிக்கப் பட்ட பிறகு "நியூடைம்ஸ்" பத்திரிகை பத்திராதி யாரான மிஸ்டர் ஜாஸ்வானி (Mr. Jaswani) தனது பத்திரிகைகளில் கிலாபத் கன்பரன்ஸ் விஷயமாக வெளிவந்த பிரசுரங்களை ஆஜர் செய்தார்.

பிறகு பம்பாய் போலீஸ்கமிஷனர் மிஸ்டர் கெல்லி (Mr. P .A. Kelly)தான்பம்பாய் கிலாபத் ஆபீஸுக்கு சென்று பரிசோதனை செய்து எடுத்த பட்வாக்களையும் இதரரிகார்டுகளை ஆஜர் செய்து இது சம்மந்தமாய் வாக்கு மூலம் கொடுத்தார்.

தேக்சிந்த் முச்சாந்தனி(Tekchind H. Muchandani)என்பவர் தான் "டெய்லி கெஜட்" என்னும் பேப்

பருக்கு சமாசாரக் குறிப்பு எழுதுபவரென்றும் ஆஜர் இருந்த குறிப்புகள் பொதுவாய் சரியாக இருப்பதாக வும் சொன்னர்.

பிறகு போலீஸ் ஸூப்ரிண்டெண்டு, ஸி. ஐ, டி. இன்ஸ்பெக்டர், ஸி.ஐ.டி. ஸப் இன்ஸ்பெக்டர், முதலான அதிகாரவர்க்கத்தில் சேவகம் செய்பவர்கள் விஜாரணை செய்யப் பட்டார்கள். இவர்களது வாக்கு மூலங்களில் ஒன்றும் மற்ரேர்கள் சொன்னதை விட புதிதாயாவது எடுத்துக் காட்டக் கூடிய சிறப்புடனவது இருப்ப தாக தெரியவில்லை.

இவ்வாறு விசாரணையான பின்னர் சென்னை ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் சையத் அப்துல் கரீம் (Inspector Syed Abdul Karim) தான் வால்டேரில் முகம் மது அலியை செப்டம்பர் மாதம் 14ம் தேதி கைது செய்ததையும் அவர் வசமிருந்து எடுக்கப்பட்ட ஸாமான்களின் விபரமும் சொல்லி சில சாமான்களை முகம்மது அலியின் பீகம்சாகியா விடம் கொடுத்ததாக வும் சிலவற்றை ஸிம்லா ஸி. ஐ. டி. லாகாவுக்கு அனுப் பிய தாயும் வாக்கு மூலம் கொடுத்தார்.

இன்னும் சில்லரை சாக்ஷியம் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் மேஜிஸ்ட்ரேட்டார் எதிரிகளான மௌலானு முகம்மது அலியையும் மற்ற அறுவரையும் வாக்கு மூலம் கொடுக்குமாறு கேட்க அன்னூர்கள் கொடுத்த வாக்கு மூலங்கள் பின்னுல் ஒரு அத்தியாயத்தில் காண்க.

---

# அத்தியாயம்: 6

## மௌலானா முகம்மத் அலியின் விவரப் பத்திரிகை.

நாளுக்கு நாள் இவ்விஜாரணையில் வெளிப் படுத்தப்பட்ட இந்த கோர்ட் நடவடிக்கைகளில், நான், ஒத்துழையாமை இயக்கத்திற் சேர்ந்தவனுதலால், ஒரு விதமான ஸம்பந்தமும் வைத்துக் கொள்ளவில்லை. சாட்சியத்தின் ருஜூவுக்கு இது ஏற்றுக் கொள்ளப் படும் அம்சம், அல்லது இல்லை, என்ற விஷயத்திற் கூட நான் எடுத்துக் காட்டாமல் எவ்விதமான சாக்ஷியம் விடப்பட்டதிலும் நான் ஆட்சேபணை செய்யாமலிருந்தேன். சாக்ஷிகளைக் குறுக்கு விசாரணை செய்யவுமில்லை. கவர்ண்மெண்டு தரப்பு வக்கீல் தனக்கு முற்றிலும் அனுசரணையில்லாத உத்திரங்கள் சாக்ஷிகளிடத்தி லிருந்து வந்த காலத்தில் அவர்களை குறுக்கு விசாரணை செய்த காலத்தும் நான் ஆக்ஷேபிக்கவில்லை. இந்த கவர்ண்மெண்டாரு

டன் ஒத்துழையாம லிருக்கும் என் போன்றவர்கள் கச்சேரிக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது ஸமாசாரங்களைக் காட்டக்கூடிய ஸ்டேட்மெண்டு கொடுப்பதேயல்லாமல் வேறு எவ்விதத்திலும் நடவடிக்கைகளில் சம்பந்தம் வைத்துக் கொள்வதில்லை. அதுவும் நாங்கள் பிரதிவாதம்செய்து தப்புவதற்காகக் கொடுக்கிறதில்லை. ஆனால் நடந்த சமாசாரங்களை அரைகுறையாய் அரிந்தவர்களுக்கு, குழப்பமுண்டாகாமல் உள்ளதைத் தெரிவிக்குமாறுதான் ஸ்டேட்மெண்டு கொடுப்பது. ஆனால் இந்த கேஸ் ஸம்பந்தப்பட்டவரையில் இவ்வித ஸ்டேட்மெண்டு கூடக்கொடுப்பதற்கு அவசியமில்லையாயினும், அனாவசியமான சாக்ஷிகளைக்கொண்டு சுற்றிச் சுழன்று யாருமரிந்ததை ருசிப்பிக்க முயன்று, கடாசியில் ஒருவருக்கு மொன்றும்புரியாதபடி ஆய்விட்ட நடவடிக்கையை, சீக்கிரத்தில் முடிவுக்குக் கொண்டுவரவே இந்த ஸ்டேட்மெண்டு கொடுக்கிறேன்.

என்னுடைய தமயன் இன்னும் சிலருடன் நான் கராச்சிக்கு வந்தேன். வெகு பேர்களுடன் கங்கசாலாவில் வாஸ்தவமாகத் தங்கினேன். அவ்விடத்தி

விருந்தவரையில் பகலிலும் இரவிலும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். சில வேளைகளில் அவர்கள் இரவுகளில் வந்து போவது எனக்கும் என் தமயனுக்கும் கூட கொஞ்சம் அசௌகரியமாகத் தானிருந்தது. ஆனால் ஒரு கான்பரன்ஸ் கூட்டம் கூடுவதாகத் தயார் செய்யும் பொழுது இந்த அசௌகரியங்களை யெல்லாம் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டியது. கங்கசாலாவை விட்டுத் தனியேயும் என்னுடைய தமயன் பின்னுடனும் அடிக்கடி வெளியிலே போயிருக்கிறேன். அது ஜெயிலாக யில்லையாதலால் என்னிஷ்டம் போல் போனேன் வந்தேன். என்நண்பர் டாக்டர் கிச்லூ எப்பொழுதும் தன்னுடைய மாகாணத்து விஷயங்களை கவனித்துக் கொண்டிருந்ததனால் அவருடன் வெளிச்சென்றிருப்பது வெகு அபூர்வம்.

ஒரு சாக்ஷி சொன்னார் நான் நடு இரவு 1-30க்கு வந்ததாக சொன்னார். ஐயோ பாவம். அவர் சொன்னபடி அப்போது திரும்பிவரவில்லை. ஒரு வேளை அவருடைய டியூட்டி (வேலை) இரவு 12 மணி முதற் கொண்டோ என்னமோ, அதனால் அந்த டியூட்டி

காலத்தில் என்னை பார்த்ததாக சொல்ல வேணு மென்று சொன்னரோ என்னமோ தெரியாது. அந்த வேளையில் என் அண்ணனுடன் நான் ஒத்து நடந்திருப்பேன். எப்படி? அவர் தூங்கி குரடு விடும் வழக்கம்போல் நானும் தூங்கிகுரகு விட்டி ருப்பேன். அப்படி ஒத்து இருவரும் சேர்ந்து செய்ததுகூட இந்தியன் பெனல்கோடு 120 பிரிவை அலக்ஷியம் செய்வதற்கு இல்லை. நாங்கள் ஏதேனும் சதியாலோசனை செய்ததாக யிருந்தாலும், ஒளி மறை வில்லாமல் பட்டபகலிலேதான் நடந்திருக்கும்.

கராச்சியில் கூடின கடைசி கிலாபத் கான்பரன் ஸில் நான் அக்கிராஸனம் வகித்தேன். நான் பெல் கோவாம் ஜில்லாவில் கோக்கால் கான்பரன்ஸில் நான் நடத்தியது போலவே இங்கேயும் அங்கோரா ராஜ்யத் திற்கு விரோதமாக சண்டை வரக்கூடிய விஷயத்தை ஒட்டி தீர்மான வாசகத்தைத் தயாரித்தேன். கராச்சி கான்பரன்ஸில் அந்தத் தீர்மானத்தையும் படித்தேன். எனது அன்புமிகுந்த குருவான காலஞ்சென்ற மௌலானு ஹுஸேன் அகமத்கான் ஹஜீப்மதாரின் (Moulana Hussain Ahmed khan Hajib

Madareen) என்ற பெரிய மனிதரை தீர்மானத்தை பிரேரேபிக்க கேட்டுக்கொண்டேன். அத்தீர்மான விஷயமாக கடாசியில் என் குறிப்புகளையும் எடுத்துரைத்தேன். அத்தீர்மானத்தை தங்கள் நிபந்தனையாகக் கொண்டு ஆதரிப்பவர்களை யெல்லாரும் நிற்குமாறு கேட்டுக் கொண்டேன். ஆனால் ஒரு விஷயத்தில் ஒவ்வொரு சாக்ஷியும் பொய் சொன்னார்கள். அப்போது நின்றுகொண்டு ஜனங்கள் ஆதரித்த தீர்மானங்கள் இது ஒன்றுமட்டுமன்று. அன்று வெளிவந்த பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது போல இன்னும் இரண்டு தீர்மானங்களுக்கு குறையாமல் இதே மாதிரி நிறைவேற்றினோம். இதற்காக என் இச்சாக்ஷிகள் பிரயோஜனமற்ற பொய்யை சொல்லவேண்டும். அப்படி சொல்லாவிட்டால் சர்க்கார் தரப்புக் குற்ற விஜாரணையின் மாமூல் வழக்கம் மாறிவிடுமென்றா? அந்த தீர்மானத்தின் ஸாரத்தை வேணுமென்று அபத்தமாக கவர்ண்மெண்டாருக்கு தெரிவித்திருப்பதாக எனக்கு தோன்றுகிறது. எங்கள் பேரில் கேஸ் நடத்தும் சமமுந்தமாக வைஸராயால் கொடுக்கப்பட்ட உறுதிச் சொல்லை இரண்டகம் செய்து மாற்றுவதற்கு ஒரு

காரணம் உண்டாகுமென்று ராணுவச்சேனை சம்மந்தமான பாகத்தை முக்கியமாய் எடுத்துக்காட்டப்பட்டதென்றும் தோன்றுகிறது.

அதைப்பற்றி எனக்கொன்றுமில்லை. எனக்கு ஒருவித மகிழ்ச்சியுண்டு. பகிரங்கமாக கவர்ண்மெண்டு இஸ்லாத்தை எதிர்த்து அது தன்னை காப்பாற்றிக் கொள்ள என்னதான் செய்யும் என்று பரிக்ஷை செய்ய கவர்ண்மெண்டு வெளிவந்திருக்கிறதற்கு நான் நன்றியறிதலாயிருக்கிறேன். கோக்கல், கராச்சி இவ்விரண்டு இடங்களில் கான்பிரன்ஸுகள் நடைபெற்ற காலத்தில் இஸ்லாத்தையும் கிலாபத்தையும் ஆதரிப்போர்களின் மேல் எப்போது சமயம் என்று பார்க்கப்பட்டது என்றது தெளிவாய் தெரியும். இஸ்லாத்தையும் அதன் கிலாபத்தையும் எப்படி பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு நாசமாக்கவும், மூன்றுவது மனுஷாள் மூலம் துவம்சப் படுத்தவும் தங்களாலானவரை செய்தார்களென்று தெளிவாய் தெரியும். இக்கவர்ண்மெண்டுக்கு எச்சரிக்கைக்குப் பின் எச்சரிக்கையாக கொடுத்து வந்து இந்தியமுஸல்மான்களின் பொறுமை கடாசியாய் குறைந்து வந்தது. இந்துதேசத்து மதஸ்தர்களில் வெகு

ஸிரத்தையும் வைராக்கியமும் உடையவர்களால் வீண் முயற்சிகள் செய்யப்பட்டு இந்தியாவில் அமைதிக் குறைவு ஏற்படுமோ வென்று கவலைப் பட்டோம்.

மதஸம்பந்தமாயும் கிலாபத்தை பாதுகாக்கும் விஷயமாயும் நான் இந்த கவர்ண்மெண்டுக்கு தெரிவித்தேன். கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள பொறுப்பை ஆராய்ந்தோம். பதஷ்டமாக இருந்த முஸல்மான்களின் சலனமுள்ள கவனத்தை ஒரு பிரயோஜனமுள்ள வழியில் திருப்பினோம்.

## கவர்ண்மெண்டுக்கு எச்சரிக்கை.

கவர்ண்மெண்டுக்கு இரண்டு விஷயங்களில் எச்சரிக்கை செய்தோம். காங்கிரஸ் சம்மந்தமாக சட்டத்துக் குள்ளடங்கிய கீழ்படியாமை (Civil dis-obidience) உண்டா யிருக்கிறது என்பது ஒன்று. வரும் டிசம்பர்மாதம் கூடும் இந்திய நேஷனல் காங்கிரஸ் நடைபெறும் போது இந்தியாவின் சுயேச்சையும் இந்தியாவில் ஸதாபிக்கப்படும் பிரஜாதிபத்யம் இரண்டு. பிரிட்டிஷாரால் வெளிப் படையாகவாவது ஒளித்தாவது, தாங்களேயாவது கிரேகார்கள் மூலமாயாவது இஸ்லாத்துக்கு மிஞ்சியுள்ள சொல்ப

வல்லமையையும் கெடுக்க விரோதமான காரியங்கள் செய்யப்பட்டால் மேற்கூறிய இரண்டு வகைகளில் நமது கருத்தை நாட்டுவதாக இருந்தது. ஒவ்வொரு பத்திரிகைகளும் ஒத்துழைப்பை கைக்கொண்டாலும் சரி, ஒத்துழை யாமையைக் கைக்கொண்டாலும் சரி, கொஞ்ச தூரத்தில் மிளிர்கின்ற இந்த பிரஜாதிபத்யத்தைப்பற்றி கூறின. ஆனால் எங்கள் தீர்மானங்களில் சொல்லப்பட்ட இந்திய சிப்பாய்களைப் பற்றி வெளிப்படையாக ஒன்றும் எழுதியதாக எனக்கு தெரியவில்லை. இந்திய முஸல்மான்களுக்குள் வெகு மரியாதையும் கன்னியமுமுள்ள உயர்ந்த உலேமாக்கள் வெகு மாதங்களுக்கு முன்பேயே ஒத்துழையாமை என்ற விஷயமாக தங்களது நிச்சந்தேகமான எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள். லெஜிஸ்லேட்டிவ் கௌன்சிலில் போகாமை, வக்கீலாய் ஜீவனம் செய்யாமை, சர்க்காருடைய பள்ளிக்கூடங்களிலும் அவர்கள் ஆதரவு பெறும் பள்ளியிலும் படியாமை, பட்டம் கன்னிய வேலை முதலியவைகளை விடுதல், கவர்ன்மெண்டில் சட்டலாக்கா ராணுவலாக்கா இவைகளில் வேலை செய்யாமை இவ்விஷயங்களில் முகமதிய மத அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

## நமது இந்திய சிப்பாய்கள்.

நமது சிப்பாய்களிடத்தில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. எங்கள் பேரில் கேஸ் நடத்தும் விஷயமாக கவர்ன்மெண்டார் பிரசுரித்த கடைசி நோட்டீஸ் (Communique) லும் சிப்பாய்களை நிரம்ப மரியாதை செய்திருக்கிறார்கள் இதனால் இந்த சமயவனுசரணையற்ற கவர்ன்மெண்டால் மதப்பற்றுள்ள ஜனங்கள் எவ்வளவு ஒழுக்கச் சிதைவடைந்ததை காட்டுகிறது. பசியுற்று அவதிப்படும் நமது சகோதரர்களான அவர்கள் விஷயத்தை இனிமேல் நாம் கருதவேண்டியது. ராணுவ உத்தியோகத்திலும் சேனையிலும் உள்ள முஸல்மான்களுக்கு அனுப்பப்பட்டதாக சொல்லும் சிறு துண்டு நோட்டீசுகள் விஷயம் எனக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும், இந்திய சேனைக்கு ஸ்வாமியின் தேவ விசேஷத்தை பரவச்செய்ய உலேமாக்களது சங்கங்கள் உதவியதென்று அறிய சந்தோஷமடைகிறேன். ஆனால் இதைமறக்க வேண்டாம். இந்திய சேனைகளுக்கு இத்துண்டு நோட்டீசுகள் அனுப்பியது தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்றும் தாங்கள் ஒன்றும் அனுப்பவில்லை யென்றும் ஜமைதுல் உலேமா சொல்லுகிறார்கள்.

## மகாராணியின் அறிக்கைப் பத்திரம்.

1858-ம் வருஷம் இந்தியாவில் சிப்பாய் கலகம் ஏற்பட்டிருந்தபோது, மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் ஜனங்களுக்கு அமைதியுண்டாக்கி வாக்குறுதிசெய்ய முதல் முதலாக ஒரு அறிக்கைப் பத்திரம் பகிரங்கப்படுத்தி இன்னுட்டை நேரே ஆளக்கைக் கொண்டார்கள். இந்த அறிக்கைப்பத்திர விஷயமாக ஒரு விநோத சம்பவம் சொல்லவேண்டும். இங்கிலாந்து தேச அரசர்களுக்கு ஏற்பட்ட பட்டங்களில் 'மதத்தை காப்போர்' என்ற ஒரு சிறந்த பட்டம் ஒன்று உண்டு. இந்த காலத்தில் உள்ள மந்திரியைப் போலவே அந்தக்காலத்துமந்திரியும் சூக்ஷ்ம புத்தியையுடையவர். அவர் "மதத்தைக் காப்போர்" என்ருல் பொதுவாக எம்மதத்தையும் காப்பதாக அர்த்தம்வரும் என்று எண்ணினர். இந்திய பாஷாபிவிர்த்தியுடைய ஒருவர் உடனே அவரிடம் இந்தியர்களுக்கு என்ன எண்ணம் உண்டாகுமென்ருல் தங்களுடைய மதங்களுக்கு விரோதமாயுள்ள ஒருமதத்துக்கு தலைமை வகித்து காப்பவர் என்று பொருள் படுத்துவார்கள் என்ருர். ஆதலால், மந்திரியான லார்டு டர்பி (Lord Derby)

பிரபு அந்த பட்டத்தையே அறிக்கை பத்திரத்தி லிருந்து எடுத்துவிட எண்ணினர். இது மகாராணியி னது அபிப்பிராயத்துக்கு சென்றவுடனே, அவ் வன்னையார் அதற்கு விரோதப்பட்டு அவ்வறிக்கைப் பத்திரத்தின் முதற் பிரகரணத்தை (Para) முற்றிலும் மாற்றி எழுதியும் இந்திய ஜனங்களுக்கு தமது உத்தர வாதத்தை அம்முதற் பிரகரணத்தில் தெரிவிக்குமாறு உத்தரவளித்தனர்.

அதில் அவ்வன்னையார் ஸர்வ வல்லமையுள்ள கடவுளின் அனுக்கிரகத்தால் தாம் தமது மதத்தின் கட்டுப்பாட்டின்படி விச்வாஸத்தோடும் முழு மனச் சாக்ஷியோடும் நடந்து கொள்வதாய் கூறியுள்ளார். அதாவது "கிறிஸ்தவமார்க்கத்தின் உண்மைப் பிரமா ணங்களை நிச்சயமாய் நம்பி, மதம் என்பது கொடுக்கக் கூடிய ஆறுதலை ஏற்றுக்கொண்டு, நமது பிரஜைகளில் யாரிடமாவது நமது மத விஷய உணர்ச்சியை சுமத்தப் போகிறதில்லை."

அப்படியிருக்க, சென்ற இரண்டரை நாளாக சர் கார் தரப்பில் மதவிஷ உணர்ச்சியைச் சுமத்தப் பிரயத் தனித்தார்கள். அவ்வித மத உணர்ச்சி இஸ்லாமல்ல வென்பது நிச்சயம்.

மேற் சொன்ன அன்னையாரின் உத்திரவாத பத்திரத்தில் "ஒரு மதத்தை அனுசரித்து வருவதால் அவரிடம் பிரியம் காட்டியும், வேறு மத அனுஷ்டானம் வைத்துக் கொள்வதால் துன்பப் படுத்தி தொந்திரவு செய்யப்படவுமாட்டாது என்று நாம் கூறுகிறோம். சட்டத்தின் அனுசரணை பாரபக்ஷமின்றி யாவரும் அடைந்து சரிசமத்துவத்தை எல்லோரும் அனுபவிப்பார்கள் என்றும் கூறுவோம்." இப்படியே நீங்களும் செய்வீர்களென்று நம்புகிறேன். இன்னும் அதிற் கூறியுள்ளது:—"நமக்கு உட்பட்டு அதிகாரத்தை வகித்து வருபவர்கள் எல்லோரும் நமது பிரஜைகளில் யாராவது எவ்வித மதக்கொள்கையும் ஆராதனையும் அனுஷ்டித்தாலும் எவ்விதத்திலும் அவைகளில் தலையிடக்கூடாது என்றும் அப்படிச் செய்தால் நமது மிகையான வெறுப்புக்குள்ளாவார்கள்"

இந்த வாக்குறுதியில் தெரிவிக்கப்பட்ட 'அதிகாரத்தை வகித்து வருபவர்கள்' என்றதில் முதன்மையாக இருப்பவர் இந்திய கவர்னர் ஜனரல். அவரது மன ஒத்துமையுடன் தான், இப்போது இங்கு எங்கள் கொள்கை, மத நம்பிக்கை இவைகள் காரணமாக, எங்

களை சிறைக்குள்ளாக்கி தொந்திரவு செய்து இன்னும் இந்திய பீனல்கோடுப்படி சிக்ஷைகளுக்கும் உட்படுத்த வழி தேடப்பட்டிருக்கிறதென்று எண்ணுகிறேன்.

ராணியாரின் உறுதிவாக்கின் கடைசிவாசகம் அவரது கையாலேயே எழுதப்பட்டிருக்கிறது. இந்திய ஜனங்களைக்குறித்து அவ்வன்னையார் சொல்வதாவது "அவர்கள் ஸம்பத்துட னிருந்தால் நமக்கு பலம் உண்டு. அவர்கள் மனத் திருப்தியுடன் இருந்தால் நமக்கு பத்திரம் உண்டு. அவர்கள் நன்றியுணர்வுடன் இருந்தால் அதுவே நமக்கு கைம்மாறு. கடவுள் நமக்கும் நமக்குள்பட்ட அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் இவ்வாருன செயல்களை உண்டுபண்ணுமாறு பலத்தையும் அனுக்கிரகத்தையும் கொடுப்பாராக."

## பின்னால்வந்த வாக்குறுதிகள்.

பிரிட்டிஷ் இந்திய அரசியலில் அஸ்திவாரமாக இப்பத்திரம் ஏற்பட்டிருக்கிறது. ஐம்பது வருஷங்களுக்கு பிறகு அவ்வன்னையாரின் குமாரரும் பின்வந்த வருமான நமது ஏழாம் எட்வர்டு சக்கரவர்த்தி (H. M. Edward VII) யும் வேறு ஒரு வாக்குறுதி கொடுத்தார். இவ்விரண்டு அரக்கைப்

பத்திரங் களுக்கும் ஊடே இருக்கும் அவர் நூற்றுண்டின் விஷயமாக அவர் கூறியதாவது "சென்ற ஐம்பது வருஷங்களாக நாம் செய்த வேலைகளை ஒரு தெளிந்த பார்வையுடனும் மனச்சாக்ஷியுடனும் நோக்குகிறோம்." கொஞ்சம் பிறகு அவரே சொல்லுகிறார் "எனது பிரஜைகளில் யாரையாவது ஒரு மதக்கொள்கையை பின்பற்று வதற்காக கஷ்டத்துக்குள்ளாக்கப் பட்டது அல்லது தொந்திரவு செய்யப்பட்டது என்று சொல்ல முடியாது. எல்லாரும் சட்டக்கட்டுப் பாட்டால் ஸாதக மடைகிறார்கள். மதம், ஜாதி, வகுப்பு இவைகளுக்கு வித்தியாஸம் அன்னியில் ஒரே மாதிரியாக சட்ட அமுல் நடத்தப் படுகிறது." 1910ம் வருஷம் மேமாதம் 24ம் தேதி நமது பிரகிருத அரசர் பெருமான் சிம்மாஸன மேறுங் காலத்தில் இந்திய ஜனங்களுக்கும் சிற்றரசர்களுக்கும் ஒரு கடிதம் வரைந்தார். அதில் மேற் கூறப்பட்ட இரு அறிக்கைப் பத்திரங்களையும் காட்டிக் கூறியதாவது "ராஜரீய ஆளுகையின் மேன்மையும் காருண்யமுள்ள செய்கையின் பயனுள்ள ஸாதனங்களே இவை. என் ஆயிசு பரியந்தம் அவைகளின் படியே நடந்து வருவேன்."

## மதச்வேச்சையின் அபாயநிலை.

நான் அனுபவிக்கும் சட்டக்காப்பானது இந்த ஸ்திதியில் இருந்தால், நல்ல மனச்சாக்ஷியுடனும் தெள்ளிய நோக்குடனும் தனது ஆக்ஷியை ஒரு அரசரும் உற்றுப் பார்க்க முடியாது. ராஜரீக ஆளுகையினால் உண்டாய மேன்மையும் காருண்யமும் இருக்க இச்சாஸனங்கள் இவ்வாறு கிரியாம்சத்தில் நடைபெறுவது கேவலமன்றோ.

* * * *

இந்தியாவிலுள்ள முகம்மதியர்களுக்கும் இந்தியர்களுக்கும் இந்த ஸாஸனங்களால் என்ன வழியுண்டாயிற்று? நான் ஏதேனும் ஒரு பிசகு செய்திருக்கும் பக்ஷத்தில், என்பிசகை காட்டி சீர்திருத்துவது எவ்வாறெனின் கொருனையாவது, நபிகளின் சரிதைகளையாவது, யாவரும் அங்கீகரிக்கும் மௌல்விகளால் கூறப்பட்ட உபதேசங்களையாவது காட்டினால்தான் நான் சரியான முகம்மதியாரானால் கட்டுப் படுவேன். ஆனால் தற்காலத்தில் எங்கள் சாஸ்திரம் சரித்திரம், உபதேசங்கள் முதலியவைகள் சொல்லுகிற படியே செய்திருக்கிறேன் என்று ஆறுதலடைகிறேன்.

இவ்வாறு நான் செய்ததற்கு சைத்தான் என்று தன்னை பிறர் சொல்ல இஷ்டமில்லாத ஒரு கவர்ண் மென்டு என்பேரில் இப்போது கேசு நடத்தி தொந்திரவு செய்கிறார்கள்.

*　　*　　*　　*

## கடவுளின் சுயாதிபத்யம்

இஸ்லாத்தின்படி ஒரே ஆதிபத்தியந்தான் உண்டு. அதாவது ஸகலத்திற்கும் மேம் பட்டதாயும் யாதொரு நிபந்தனை யில்லாததும் எவராலும் மீறக் கூடாததும், பகுக்கக் கூடாததுமான கடவுளின் ஆதி பத்தியமே. யூஸப் (Yusuff) என்னும் தீர்க்க தரிசி தன் னுடன் கூட இருந்த கைதிகளுடன் உபந்நியாசம் செய் ததைப் பாருங்கள். "ஓ; என்கூட்டாளிக் கைதிகளே! சில்லரை தெய்வங்களுக்கு நீங்கள் தொண்டு செய்வீர் களா? அல்லது ஸர்வத்தையும் அடக்கியுள்ள பரம புரு ஷனை தொண்டு செய்வீர்களா? நமது வம்சபரம்பரை யாக முன்னோர்கள் கூறிய தேவநாமங்கள் அவரைத் தவிர்த்து வேறு ஒன்று மில்லை. அக்கடவுள் யாதொரு அதிகாரக் கட்டளையையும் பிறப்பித் தாரில்லை. அவருடைய ராஜரீகத்தை தவிர்த்து வேறு

ஒருவருடைய ஆளுகையுமில்லை. அவரது ஒப்பற்ற வஸ்துவைத் தவிர்த்து வேறுஎதையும் சேவை செய்யக்கூடாதென்று கட்டளை யிருக்கின்றார்." இதுவே உண்மையான மதம். மானிடரில் பெரும்பாலோர் அறியவில்லை. இன்றையதினமும் கொரானிலிருந்தும். நபியினது ஐதீகஸம்பரதாயங் களிலிருந்தும் எடுத்துக் காட்டி இதுவே நீசெய்ய வேண்டிய முதற் கர்ம மென்று காட்டினாலும் இதைப் பெற்ற சுபேதார் மேஜர்கள் மனத்திகி லடைந்து தனது அதிகார உத்தியோகஸ்தரினிடம் சென்று, பரிதபிப்பதைப் பார்த்தாலே இன்னும் பலருக்கு மதஉணர்ச்சி இல்லை என்றே கூறுவேன். கடவுளின் சுயாதி பத்தியத்தை ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு ஜாதி குலத்திலும், ஒவ்வொரு தீர்க்க தரிசிமூலம் வெளிப்படுத்தி கடாசியாக முகம்மது நபி எல்லா மாணிடருக்கும் கடவுளின் விசேஷத்தையும் சொல்லி இவ்வுலகி லிருந்து போன பின் அவ்வேலையை யார்செய்தது? நம்மதத்து அதிகாரியும் நபியின் ஸந்ததி யாருமான காலீபா (Caliph) அல்லவா? அவ்வம்ச பரம்பரை நாளைக்கும் தொடர்ந்திருந்து இப்போதிருக்கும் மத அதிகாரி மாகூதிமையுள்ள துருக்கி ஸுல்தானாக விருக்கிறார்.

## ஒரு முஸல் மானின் ராஜபக்தி.

கொருணி லிருந்து அறியப் பட்டபரம் பொருளி டத்திலும் அவரது குணத்தி லீடுபட்ட தீர்க்க தரிசி யிடத்திலும் அவருக்குப்பின் முஸல் மான்களுக்குள் அதிகாரத்துவ மடைந்த அவர் ஸந்ததியான மதஅதி காரி யிடத்திலன்றி ராணுவ உத்தியோகத் திலிருந் தாலும் அல்லது நியாய லாகாவிலிருந்தாலும் அல்லது ஒரு முகம்மதிய அல்லது மற்ற ஆளுகைக்குப் பட் டிருந்தாலும் வேறு ராஜபக்தி இதைத்தவிர இல்லை.

*   *   *   *

## இஸ்லாத்தின் ஆதாரமுமான கோட்பாடு.

இஸ்லாத்தின் உள்ளிருக்கும் உபதேச முழுவ தும் "லாயில் லாஇல் இல்லா முகம்மத் ரசூலில்லா" என்ற பிரமாணத்துக் குள்ளடங்கியது. அதாவது ஆண்டவரைத் தவிர்த்துக் கடவுளுமில்லை, முகம் மதைத் தவிர்த்து நபியுமில்லை.

*   *   *   *

## இம்மைக்குறிய ராஜ பக்தியின் எல்லை

இத்தகைய கோட்பாட்டின் தெளிவையும் உண்மையையும் பரீக்ஷிக்க ஒரு நாள்தான் பிரஸங்கம் செய்து ஜெபம்பூண்டு பள்ளிவாசலில் கூடியிருந்த கூட்டத்தைப்பார்த்து கலீபா உமார் ஒரு பிரச்னை செய்தார். அதாவது "நபியின் ஸந்ததியில் வெற்றி யென்னும் அணிகலம் பூண்ட நான் உங்களை கடவுளுடைய ஆக்கினைக்கு விரோதமாகவும் நபியினது ஐதீக ஸம்பிரதாயத்திற்கும் விரோதமான ஒரு காரியத்தைச் செய்ய சொன்னால் செய்வீர்களா?" அதற்குச் சரியான உத்திரம் சரியான முஸல்மானான ஹஸரத் அலி அளித்ததே. அதாவது "ஹஸரத் உமார் தேவ கற்பனைக்கு விரோதமாக செய்யச் சொன்ன காரியத்துக்கு அலி—கிலாபத்துக்கு பக்திவிச்வாஸம் காட்டிய அலி—உமாரின் தலையை தட்சணமே வெட்டித் தானே ஸிம்மாஸன மேறினார்."

இதை ஒத்த ஸம்பவம் இந்தியாவில் பிருடிஷ் ஆளுகையில் உண்டாகவில்லை. ஆனால் இங்கிலாந்தில் நடந்தது. தேவனுக்குள்ள பாத்யதை அரசருக்குண்டென்று முழுவதும் எண்ணி நடந்த அரசனின்

தலையை கிறிஸ்தவ ஸங்மார்க்கர்களென்னும் பியூரிடன்ஸ் (Puritans) வெட்டினார்கள். முகம்மதியர்கள் இதற்கு முன்னும் பல இடங்களிலும் முகம்மதியரில்லாத ஆளுகைக்குட்பட்டு அமைதியுடனிருந் திருக்கிறார்கள். ஆனால் எந்த மகம்மதியனும் இந்த ஆளுபவர்கள் பிரசுரிக்கும் சட்டங்களும் உத்திரவுகளும் கடவுளின் கட்டளைக்கு விரோதமில்லாதிருக்கும்வரை கீழ்ப்படிவார்கள். கொரானிலே அறியக்கூடியது என்னவென்றால் ஸகல ராஜ்யாதிபதிகளுக்கெல்லாம் அரசர் அக்கடவுள். இவ்விதம் கீழ்ப்படிதலுக்குள்ள எல்லை அரசன் மகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர் அல்லது பிறர் என்ற விஷயத்திற்கு ஸம்பந்தமில்லை. ராம்பூரிலிருக்கும் நவாப்பானாலும் சரி, ஹைதரா பாத்திலிருக்கும் நிஜாமானாலும் சரி துருக்கியிலிருக்கும் ஸுல்தானாயினும் சரி, முகம்மதிய சட்டதிட்ட கோட்பாடுக்கு விரோதமான ஒரு கட்டளையை யிட்டுக்கொண்டு செலுத்த முடியாது.

* * * *

மேற்படி நபியே வேறொரு இடத்தில் ஐயம்திரிபு அறக் கூறியதாவது "சிருஷ்டி கர்த்தாவினுடைய் ஆக்ஞைக்கு விரோதமாக யாதொரு சிருஷ்டிக்கப் பட்டவனுக்கும் கீழ்படிவது அனாவசியம்"

## ஸர்க்காருக்கு எச்சரிக்கை கொடுக்கப் பட்டது

பிரிடிஷ் ராஜ்ய மந்திரியான மிஸ்டர் லாயிட் ஜார் ஜின் கிலாபத்துக்கும் இஸ்லாமுக்கும் விரோதமான காரி யத்தின் பயனாக, இந்தியமுஸல் மான்களை என்ன நிலைமைக்கு நீங்கள் வெரட்டுகிறீர்களென்று முகமதிய கிலா பத்தார்களின் பிரதி நிதியாக சென்றவர்கள் சீமையில் தகுந்தபடி எச்சரித் திருக்கிறார்கள். 1920 ஹு மார்ச்சு மீ 19உ டௌணிங் தெருவில் நாங்கள், அம்மந்திரியை பார்த்த காலத்தில் மேற்கூறிய ஐதிகப்பரம்பரை முழுவதையும் கூறியுள்ளோம். ஆதலால் பொதுவாக இந்திய முஸல்மான்களும் முக்கியமாக நாங்களும் இப்போது செய்து வரும்காரியம் இந்த கவர் மெண்டார் பிரமை அடையத் தக்க ஒரு விஷயமல்ல. கடவுளுக்கு ஓர் கடமை நாங்கள் செய்ய வேண்டிய துண்டு. இந்த ஸாம் ராஜ்யத்திற்கும் எங்களுக்கு ஒரு கடமையுண்டு. ஆதலால் இந்த ஸாம்ராஜியத்துக்கு உரிய கவர்மெண்டார் இட்ட கட்டளை ஸர்வ வியாபக தேவ ஆக்ஞயின் கட்டளைக்கு விரோதமாக ஏற்படவே முஸல்மான்களாக விருக்கின்ற நாங்கள் அக்கடவுளை வழிபடுவோம். அதற்கேளங்கள் சக்திக்கேற்ப உழைத்து வருகிறோம்.

# ஸர்க்காரின் இஸ்லாமின் மேற்கொண்ட விரோதம்.

கடவுளுக்கு எது பிரியம் என்றும் எது அவசியம் என்றும் எண்ணுவது போலவே ஒரு முஸல்மானுக்கு (அரசாங்கத்தினிடத்தும்) பிரியம் அப்ரியம் என்று ஒரு முஸல்மான் எண்ணுவான். நபி கூறுகிருர் "அன்பும் கடவுளிடத்து உண்டு; வெறுப்பும் அவரிடத்து உண்டு" பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு கடவுளுக்கு விரோதி இஸ்லாத்துக்கு விரோதி, என்ற எண்ணம் உதிக்காமல் செய்து கொள்ளும்வரை எச்சமயத்திலும் கவர்ன் மெண்டிடம் விச்வாஸமா யிருப்பார்கள். அவர்கள் விச் வாஸம் எப்படி யிருந்ததென்றுல் இந்தியாவில் இதர மதத்தார்கள் தங்களுக்கு நிந்தையுண்டாகும் அளவு விச்வாஸம் வைத்திருந்தார்கள். இஸ்லாம் மதத்தின் பேரிலும் விசேஷமாக கிலாபத் விஷயத்திலும் கவர்ண் மெண்டார் சென்ற பத்தாண்டுகளுக்கு மேலாக நடந்து வருகிற ரீதியால் தங்கள் மதத்துக்கும் தங்கள் தேசத் துக்கும் கவர்ண்மெண்டார் விரோதம் செய்கிருர்க ளென்று நிச்சயமாய் நம்பிவிட்டார்கள். தங்களது கிலாபத்துக்கு மரியாதை காட்டுவதே தங்கள் மதக்

கோட்பாடு என்று மகமதியர்கள் கருதுகிறார்கள். கடாசியாக நடந்த சண்டையில் கிலாபத் சம்பந்தப்பட்டவரை கவர்ன்மெண்டார் இஸ்லாத்தின் புண்ணிய பூமிகளிலும், தேசங்களிலும் உள்ள சுவாதீனத்துக்கு இடைஞ்சலும், யுத்த எதிர்ப்புகளும் உண்டாகாது என்றும், கான்ஸ்டான்டி நோப்பிள் என்பதை தலைநகராக காலீபா எப்போதும்போல வைத்துக்கொள்வது என்றும், திரேஷியா, ஸ்மர்ணா என்னும் இடங்கள் காலீபே வைத்துக் கொள்வதென்றும் சொன்ன உறுதிச் சொல்லானது வெகு உல்லாஸமான ஸௌலபத்தோடு காப்பாற்றப்படவில்லை.....இந்திய மகம்மதியர்கள் காலீபாவின் மகமதிய சேனையுடன் யுத்தம்செய்ய கட்டாயம் பண்ணப்பட்டது........மதாபிமான யுத்தம் (crusade) என்று பொறுப்புள்ள மந்திரிகளும் ராணுவத் தலைவர்களும் கூறியுள்ள அந்த யுத்தத்தில் சண்டை செய்யுமாறு நமது வறுமையும் பயமும் உற்ற போர்ச் சேவகர்களை கொண்டு போனார்கள் அந்த மதாபிமான யுத்தம் இன்னும் தொடருகிறது. துருக்கியுடன் சண்டை நிலைமையற்ற கிரேக்கர்கள் மூலம் துருக்கர்களுடைய ஸ்வதேசத்தில் இம்மதாபிமான சண்டையை நடத்த கவர்ன்மெண்டால் கிறிஸ்

தவர்கள் யுத்தத்துக்கு சேர்க்கப்படுகிறார்கள். போர் நிறுத்திவைத்த காலத்தின் உடன்படிக்கைக்கு விரோத மாக துருக்கிமேல் கிரேக்கர்கள் படை எடுத்ததற்கு பொறுப்பான கவர்ன்மெண்டு அவடம் மான்மற்ற கொடுமைகளைச் செய்ததற்கும் குறிப்பாயும் வெளிப் படையாயும் உதவியாயிருந்து பொறுப்பாளியா யிருக் கிறார்கள். இது விஷயம் விசாரணை செய்த நேசக்கக்ஷி யாரின் கமிஷனர்களும் கூட சந்தேகமற்ற கொடுமை கள் செய்ததாக ஒத்துக்கொண் டிருக்கிறார்கள்.

## பலாத் காரத்தால் நிர்ணயம்.

தங்களது எவலை இயற்றத்தக்க சேனைகள் (force) இந்தியமுஸல்மான்களுக்கு இருந்துகவர்ண்மென்டுடன் முடிவான பைசலுக்கு வருவதற்கு இடமிருந்தால் இஸ் லாத்தின் நியாயப்படி சரியான முஸல்மான்களாக இருக்க இஷ்டமடைந்தால் இன்று கவர்ண்மெண்டு டன் சுகிர்தமான - திருச்சண்டை (holy war)யிட நேர்ந்திருக்கும். அதன் கடாசி முடிவான பைசல் இக் கலிக்தின மண்டபத்தில் நடந்திராது. வேறு இடத் தில் உடன்படிக்கைகள் நடந்து முடிவடைந்தி ருக்கும். அத்தகைய சைன்னியம் இல்லாமலிருக்கும் இப்பரி

தாப நிலையில் அவர்கள் இந்நாட்டை விட்டு தங்கள் மதக்கோட் பாட்டுக்கு ஒரு இடஞ்சலும் கெடுதல்களும் இல்லாததானவேறு ஒரு நாட்டில் குடியேறி பிறகு தங்கள் மதக்கோட் பாட்டின்படி தாங்கள் ஆராதிக்க கெடுதலில்லாதிருக்கும் சமயம் வந்த பிறகு இங்கு திரும்பி வருவது தான் நல்லது.

(இங்கு சர்க்கார்தரப்பு வக்கீல் எடுத்துக் காட்ட மேஜிஸ்ட்ரேட் முகம்மத் அலியை கேஸின் சம்மந்தத்துக்குள்ளதை மட்டும் தெரிவிக்குமாறு சொன்னார்.)

1920ம் வருஷம் ஜூலைமாதம் மத்திய கிலாபத் கமிட்டியார், இஸ்லாத்தின் படிக்கும், அம்மதத்தில் விசேஷ அறிவுள்ள சிலர்களைக் கலந்து கொண்ட படிக்கும், கவர்ண்மெண்டுடன் சண்டை செய்யாமலும் வேறு நாட்டிற்கு குடிபோகாமலும் தங்கள் கடைத்தேற்ற (emancipation) மடைய முடிவுக்கு வந்தார்கள்.

(இப்போது மேஜிஸ்ட்ரேட்டார் இன்னும் எவ்வளவு நேரம் ஸ்டேட் மெண்டுக்கு பிடிக்கு மென்று கேட்க இன்னும் 14பக்கம் இருப்பதாக சொன்னார். கோர்ட்டாரும் எழுத்துமூலம் தனது ஸ்டேட்மெண்

டை கொடுக்குமாறு சொன்னார். முகம்மத்அலி அப்படியே இணங்கினார்.)

2-வது எதிரியான மௌலானா ஸ்ரீ ஸேன் அஹமத் உர்து பாஷையில் பேசவே சர்க்கார் மொழி பெயர்ப்பவர் மொழி பெயர்க்க அசக்தராயிருந்தபடியால் அவரது ஸ்டேட்மென்டையும் எழுத்துமூலம் கொடுக்கப் பட்டது.

3-வது எதிரி டாக்டர் கிச்லு ஒத்துழையாமையியக்கத்தைச் சேர்ந்தவராதலால் உர்துபாஷயில் பேசினார். அது சர்க்கார் தரப்புக்கு கொஞ்சம் ஸ்ரமம் உண்டாக்கியதனாலும் ஆங்கிலேயத்தில் பேசி கோர்ட்டை உதவிசெய்ய முடியாததுபற்றி விசனித்தார்.

4-ம் எதிரி பீர் குலாம் முஜதீத் ஸிந்தி பாஷையில் கொரானின் கற்பனைகளை விரித்துரைத்து உக்கிரமான பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்.

# அத்தியாயம். 7

## மற்ற எதிரிகளின் ஸ்டேட்மெண்டு.

(தொடர்ச்சி)

ஷௌகத்அலியை மேஜிஸ்ட்ரேட்டார் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கொடுத்ததாவது:—

இந்தியாவில் கிலாபத் கான்பரன்ஸுகளில் நான் போய் இராததேகிடையாது. நான் கிலாபத் விஷயமாக நூற்றுக்கணக்கான உபந்நியாஸங்கள் செய்திருந்தபோதிலும் இந்த பிரகிர்த தீர்மான விஷயமாக அந்த இடத்தில் நான் பேசக்கொடுத்துவைக்கவில்லையே என்று வியசனிக்கிறேன். இப்போதும் அப்போதும் அத்தீர்மானத்தின் கருத்துக்கு இணங்கியே யிருக்கிறேன். ஆங்கிலேய நியாயஸ்தலங்களில் இதற்கு முன்னதாகவேயே எனக்கு நம்பிக்கையில்லை. நான் இவ்விடம் இருப்பதை பார்த்ததிலிருந்து இந்த நியாயஸ்தலங்களைவிட நாடகசாலைகள் நன்றாய் இருக்குமென்று எண்ணுகிறேன். இப்படிப்பட்ட கவர்ன்

மெண்டுடன் ஹிந்து முகமதிய பாரசீகர்கள் ஸம்மந்தம் வைத்துக்கொள்ளும்படி ஆனது எங்களது துர் அதிர்ஷ்டம் தான். இரண்டு நிபந்தனைகள் பேரில் தான் எங்கள் ராஜ விச்வாஸம் உண்டாகும்.

(இவ்விடம் மேஜிஸ்ட்ரேட்டார் பிரசங்கம் வேண்டாமென்றும் கேசுக்கு வேண்டியவாறு சொல்லுமாறும் சொல்ல ஷௌகத் அலி கூறியது.)

நாங்கள் வைஸராய்க்கு பிரதிநிதிகளனுப்பினோம். முகம்மது அலியை இங்கிலாந்துக்கு அனுப்பினோம். ஸேட் சோட்டானி அவர்களையும் அனுப்பினோம். எங்கள் மத நம்பிக்கையை கெடுக்க வேண்டாமென்று கவர்ண்மென்டாருக்கு உரைத்தோம்

நான் ஒரு முஸல்மான் இருக்க வேண்டிய மாதிரி இருந்து வர சுயேச்சை கொடுத்தாலன்றி இக்கவர்ண்மெண்டுக்கு விச்வாஸம் இருக்க முடியாது. இஸ்லாமின் கோட்பாடு என்னவென்று கவர்ன்மெண்டுக்கு எடுத்துச் சொல்ல எவ்வளவோ பிரயாசைப்பட்டோம். முதல் முதல் கிலாபத் காங்கிரஸ் அமிர்தஸரஸில் கூடியபோது நான் அக்கிராசனம் வகித்தேன். வைஸராய்க்கு பிரதிநிதிகள் அனுப்பி நேரே சொல்லச் செய்தோம். வைஸரா

யும் நேர்த்தியான உபன்னியாஸம் செய்தார். வெகு ஆதரவுடன் இருப்பதாகவும் சொன்னார்.

இங்கிலாந்துக்கு அனுப்பப் பட்டவர்கள் பிரதம மந்திரியாரைக் கண்டார்கள். இஸ்லாம் மதக்கோட்பாடு களை விரித்துரைத்தார்கள். ஆனால் சீமை என்னமா யிருந்தது. எதிர்பார்க்காத ஒரு ஜயம் இச்சண்டையில் வந்ததாக எண்ணி களிப்புற்று பொறுமையுடன் இவர் களை கேட்க வில்லை. இவர்களும் திரும்பினார்கள். அதி னால் ஹிந்து தலைவர்களுடன் சேர்ந்து ஒத்து மத்திய கிலாபத் கமிட்டியார் ஒத்துழையாமை என்னும் விஷ யத்தைக் கைக்கொள்ளலானார்கள். கிலாபத் விஷய மாய் எங்கள் முழு வேண்டுதல்களையும் கேட்டு திருப் திப் படுத்தி எங்களது தெய்வீகமான ஸ்தலங்களைக் காப் பாற்றுவிட்டாலும், ஸ்வராஜ்யம் எங்களுக்கு அளிக்கா விட்டாலும், நாங்கள் கவர்ண்மெண்டுக்கு உதவி செய்ய முடியாது. அக்டோபர் மாதம் 1ம்தேதி முதல் ஒத்துழையாமை கைக்கொள்ள ஆரம்பிக்கப்பட்டது. இப்போது நான் சுயேச்சையானவனே யல்லது ஒரு அரசபிரஜையல்ல. கடற்படைக்கும், சேனைக்கும் நான் பயந்தவனல்ல. எனக்கு வேண்டிய சௌக்கிய மிருக் கிறது.

கவர்ண்மென்டு எங்கள் மேல் கேசு நடத்தி விஜாரிக்கும் இத்தினமே இந்திய சுவாதீனத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டியது. நான் முகம்மதியனு யிருப்பதால் எனது கடமையாதெனில் கடவுள் ஆக்கினையை நம்பி மற்றோரையும் அதன்படி நடக்கச்செய்வதே. கோகால் முதலிய விஷயங்களை என்னிடம் கேட்கவேண்டாம். இஸ்லாம் மதக் கோட்பாட்டை சொல்ல தயாராக இருக்கிறேன்.

மேஜிஸ்ட்ரேட்டாரே! என்னை செஷன்ஸுக்கு விசாரணைக்கு நீர் அனுப்பும். ஆனல் நியாயப்படி நடப்பீர்!

(இச்சமயம் கொரானிலிருந்து ஒரு வேதவாக்கியத்தைப் படித்தார். அதன் பொருள்: வேணு மென்று எந்த மகமதியன் மற்றொரு மகமதியனைக் கொல்லுகிருனே அவனுக்கு நரகமே, கடவுளின் சாபங்களுக்குட்படுகிருன்.) இந்த ஒரு வாசகமே எனக்கு போதும்.

அறிக்கைப் பத்திரங்கள் மூலம் விக்டோரியா மஹாராணியும் எட்வர்டரசரும் கூறினர்கள். ஒவ்வொருவரும் அதையே சொல்லுகிருர்கள். எப்படி ?

நாங்கள் மதக்கொள்கைப் படிக்கும் நிபந்தனைப் படிக்கும் எங்கள் இஷ்டம்போல செய்ய ஸ்வாதீனம் உண்டென்று. ஆனால் கிரியாம்சத்தில் என்ன? எங்களை தண்டிக்கிறீர்கள். சுவாமியின் கட்டளைப்படி நடந்துவருவதில் என்னை நீங்கள் தூக்குமரத்தில் ஏற்றினாலும் நான் தயார். மேஜிஸ்ட்ரேட்டாரே! உமது இஷ்டப்படி நடத்தும்.

* * * *

## ஸ்ரீ சங்கராச்சார்யார்

குரு சங்கராசாரியார் : இக்கேசு சம்பந்தமாக ஏதேனும் விவரப்பத்திரிகை கொடுக்க இஷ்டப்படுவேனாயின் நான் நின்று தான் சொல்ல வேணுமென்று ஏதாவது சட்டப்பிரிவு இருக்கிறதா ?

மேஜிஸ்ட்ரேட்டார் : அது என்னுடைய உத்திரவு.

முகமத் அலி : மேஜிஸ்ட்ரேட்டாரே ! ஒரு துறவி யாச்ரம மடைந்தவரை அவ்வறத்துக் கோட்பாட்டுக்கு விரோதமாக நீர் மறுப்பது நன்றாயிருக்கிறதா? நீரும் ஒரு மதத்தை சேர்ந்தவரே.

மேஜிஸ்ட்ரேட்டார் முகமத் அலியை உட்காரச் சொல்லிவிவரப் பத்திரிகை முழுவதும் எழுதவில்லை.

சங்கராசாரியார்: இந்தகேசின் சாக்ஷியம் சம் மந்தமாக ஒரு வார்த்தைசொல்ல இஷ்டப்படுகிறேன். அந்த வார்த்தை சொல்ல என்னை எழுந்து நிற்குமாறு கட்டாயப் படுத்துகிறீரா?

மேஜிஸ்ட்ரேட்டார்: நீர் எழுந்து நின்று கேழ்வி களுக்கு பதில் சொல்ல மறுத்துவிட்டதாக முன் பேயே நான் எழுதிக் கொண்டாய்விட்டது.

## மௌலானா ஹூசேன் அஹமத்.

மௌலானா முகமத் அலி தனது ஸ்டேட்மெண் டில் கூறியது பூராவும் நான் ஆதரிக்கிறேன். இது மத சம்பந்தமான விஷயமாதலால், ஸம்பவங்கள் எல் லாம் சொல்ல வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவைகளையெல்லாம் சொன்னால் இந்தியாவைவிட மத விஷயத்தில் முன்னேற்றமடைந்த நாடு இல்லை யென்று விளங்கும்.

விக்டோரியா மகாராணி இதை நன்றாய் அறிந்து இந்தியாவில் அமைதி உண்டாகவேணு மென்றால் மதத்தில் ஸ்வாதீனம் இருப்பது அவசிய மென்று தெ ரிந்தார். அதனாற்றான் நேற்று முகமத் அலி படித்த

அறிக்கைப் பத்திரத்தை வெளியிட்டார். அதில் மத ஸ்வாதீனம் முற்றிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவருடைய மத அனுஷ்டானத்துக்காக அவரை தொந்தரவு செய்வதில்லை என்று கூறியிருக்கிறது. ஆதலால் தான் இந்தியாவில் அமைதி இருந்தது......நான் மதத்தைக் கைக்கொண்டேன். கொரானில் முழு பக்தி விச்வாஸம் வைப்பது எனது முதன்மையான கடமை.

(பிறகு ஒரு முகமதியனுடைய மதக்கொள்கையைப்பற்றியும் அது எவ்வாறு அனுஷ்டிக்கவேணு மென்பதைப் பற்றியும், மதகோட்பாட்டுக்கு விரோதமான விஷயத்தில் யாதொரு மனிதனுக்கும் கீழ்ப்படிய வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கும் கொரான் ஹாத்தீக்களைப்பற்றியும். ஒரு முகம்மதியனை வேறொரு மகமதியன் கொன்றால் ஏற்படும் ஐந்துவித தண்டனைகளையும், இன்னும் இது ஸம்மந்தமான இதர ஹாதீக்களைப்பற்றியும், இந்த கிலாபத் கான்பரன்ஸில் தீர்மானிக்கப்பட்டது எப்படி மதத்துக்குட் பட்ட மகமதியனின் கடமை என்பதைப்பற்றியும், கவர்ன்மெண்டு, இதற்கு விரோதமாய் தங்களுக்கு விச்வாஸம் காட்ட எதிர்பார்க்க முடியாதென்பதைப் பற்றியும் சவிஸ்தாரமாய் சொன்னார்.

மேஜிஸ்ட்ரேட்டார் இவரது விவரப்பத்திரிகையை எழுதவில்லை யென்று ஒரு பத்திரிகை கூறுகிறது.

## மௌலானா நிஸார் அஹமத்.

இவரும் மௌலானா ஹஸன் அஹமத் போலவே கொரானிலிருக்கும் அயத்துகளை யெல்லாம் இத்தீர்மான விஷய ஸம்மந்தமாயுள்ளவையை எடுத்துச் சொல்லி இஸ்லாம் சொல்லுவதற்கு கவர்ண்மெண்டு லக்ஷியம் செய்யாததற்கு வருத்த முறுவதாக சொன்னார். பிறகு இரண்டாவது அயத்துப்படி "ஓ, முஸல்மான்களே! எதாவது ஒரு ஜனங்கள் உங்கள் மதத்தின் கோட்பாடுக்கு விரோதமாயுள்ளவர்களா யிருந்தால் அவர்களுடன் உட்காரல் கூட கூடாது. அவர்களின் சேனையில் உழைப்பது கடக்கட்டும்" இது தான் ஒத்துழையாமை. சேனையில் உழைப்பது பெரிய பாவகாமான செயல். ஒரு முஸல்மானும் தானும் சேனையில் இருக்க முடியாது, வேறொருவர் இருக்கவும் விடக் கூடாது. நான் அந்த தீர்மானத்தை ஆதரித்தேன். இப்போதும் அதேமாதிரி செய்ய சித்தமா யிருக்கிறேன். என்னைத் தூக்குமரத்தில் எற்றி சாகடித்த போதிலும் உனது உடல் அத்தீர்மானத்தை ஆதரிக்கத்தான் செய்யும்.

# அத்தியாயம். 8

## சர்க்கார்தரப்பு ஆர்க்குமெண்டு.

இவ்வாறு எதிரிகளிடம் வாக்குமூலம் மேஜிஸ்ட்ரேட்டார் வாங்கிக் கொண்ட பிறகு, சர்க்கார்தரப்பு வக்கீலான மிஸ்டர் டி. ஆர். எல்பின்ஸ்டோன் கோர்ட்டாரைப் பார்த்து பின்வருமாறு எடுத்துச் சொன்னார்:—

இவ்வெதிரிகள் எனது வேலையின் பளுவை வெகுவாய் குறைத்து விட்டார்கள். சென்ற ஜூலைமாதம் சகல இந்தியாகிலாபத் மகாநாட்டில் தீர்மானித்த 6ம் தீர்மானத்தால் உண்டாவதுதான் இந்தக்கேஸ். இங்கேயும் கோகலிலும் 1ம்எதிரியால் படிக்கப்பட்ட தீர்மானங்கள் ஒன்றுபோல இருக்கின்றன. அவைகளை போதுமானபடி ருஜுப்பித்தாய் விட்டது. 2, 3, 4, 5, 6, எதிரிகள் அத்தீர்மான விஷயமாய் பேசியிருக்கிறார்கள். ஏழாவது எதிரியின் ஸம்மந்தம் நிதர்சனமாகவிருக்கிறது. அவ்வேழாம் எதிரி (ஷௌகத்அலி) 1, 6

எதிரிகளுடன் சேர்ந்து கராச்சி வந்ததும், I, 3 எதிரிகளுடன் கல்வியா சாலையில் தங்கியதும், 3ம் எதிரிகளுடன் வெளிச்சென்றதும் ருஜுப்பிக்கப்பட்டது. காரிய நிர்வாக கமிட்டியில் அவர் ஒரு மெம்பர். 2, 3, 5, எதிரிகள் பேசியவை தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. தீர்மானத்தைவிட அதிக உக்கிரமமாக பேச்சுகள் பேசியிருக்கிறார்கள். போலீஸ் உத்தியோகஸ்தர்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட உபந்யாஸக்குறிப்புகளை பத்திரிகைகள் விஷய குறிப்பு செய்வோர்கள் ஸரியாயிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகளின் விஷயக்குறிப்பு எழுதுவோர்கள் இத்தீர்மான விஷய மெழுதும்போது குலாம் மஜதீத்தால் தீர்மானத்தை ஸிந்து பாஷையில் தர்ஜமா செய்ததை அனுஸரித்திருக்கிறார்கள். ஆயினும் வார்த்தைகளின் கருத்து ஒரே மாதிரியாயிருக்கிறது. 9-ந் தேதி சனிக்கிழமை இரவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் உடனே 11-ந் தேதி திங்கட்கிழமை வந்த பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. ராஜாங்க விரோதமான சதியாலோஜனை நிதர்சனமாக இருக்கிறது. 1 முதல் 6 வரையுள்ள எதிரிகள் தீர்மான விஷயமாய்ப் பேசியிருக்கிறார்கள். இத்தீர்மானத்தில் கண்ட விஷயம்

போலவே, 2, 4, 5 எதிரிகள் கை எழுத்துவைத்துள்ள முத்தபிகா பத்வா (Mutafiqua Fatwa) விலும் பிரஸித்தம் செய்யப் பட்டிருக்கிறது. பம்பாய் ஸி. ஐ. டி. போலீஸ் கமிஷனரால் தாக்கல் செய்யப்பட்ட 'உல்மாஉல் ஹிந்து' சபையின் நடபடிக்கைகள் குறிப்பில் காட்டியதுபோல இரண்டாவது தீர்மானத்தை 5வது எதிரி ஆதரித்ததாக தெரிகிறது. தங்கள் வேலைகளிலிருந்தும் சேவகத்திலிருந்தும் ராணுவசேனைகளை விட்டுவிடுமாறு தூண்டுதல் செய்ய சதியாலோசனை ருஜுவாய்விட்டது. இவ்விதம் சதியாலோசனை செய்தது மட்டுமில்லாமல் 2, 4, 5, எதிரிகள் பேர் போட்ட முதபிக்வா பத்வாவின் ஸங்கிரகங்களை அச்சுத்துண்டுகள் மூலம் இந்திய சேனைகளுக்கு அனுப்பியும் இருக்கிறார்கள். இந்த அச்சுத்துண்டுகள் மூலம் துருப்புகளை வேலையைவிட்டு விலகுமாறு தூண்டுதல் செய்தது நன்றாய் விளங்குகிறது. ஆதலால் நான் இந்திய பீனல்கோடு 120A பிரிவுப்படிக்கும் 131பிரிவுப்படிக்கும் குற்றப்பத்திரிகை வாசிக்க வேணுமென்று கேட்கிறேன். பிராதின் 3வது பிரகரணத்தில் எடுத்துக் காட்டப்பட்ட தீர்மானப் பிரயோகங்களால் குற்றம் 505 A

பிரிவுப்படியும் ஏற்படுகிறது. அதில் பிரயோகப் பட்ட வார்த்தைகள் 1-வது எதிரி முகம்மது அலிபால் சொல்லப் பட்டது. 505-வது பிரிவுப்படி குற்றப் பத்திரிகை வாசிக்க வேண்டியது.

இப்படியுள்ள வார்த்தைகள் எல்லா எதிரிகளும் சேர்ந்து யோஜனை செய்ததன் பயனை உபயோகிக்சப் பட்டது. ஆகையால் 2 முதல் 7வரை எதிரிகள் பேரில் 505 பிரிவுடன் 109 வது பிரிவுப்படியும் குற்றப் பத்திரிகை வாசிக்கவேண்டியது. பிராதின் 3வது பிரகாணத்தில் கண்ட வார்த்தைகள் வெகுவாய் முகமதியர்களால் கூட்டப்பட்ட ஒரு பெரிய மகாநாட்டில் சொல்லப்பட்டவை. அவ்விடத்தில் கூடியிருந்தமுகமதியர்களையும் உலேமாக்களையும் 505,131 பிரிவுகளின் படி குற்றங்கள் செய்யுமாறு தூண்டுதல் செய்ததாக ஏற்படுகிறது. ஆகையால் 117 வது பிரிவுப் படியும் குற்றப்பத்திரிகை வாசிக்க வேணும். 2முதல் 7 வரை எதிரிகள் 109வது பிரிவுடன் 117 பிரிவுப்படி குற்றத்துள்ளாகி இருக்கிறார்கள்.

---

# அத்தியாயம். 9

## குற்றப்பத்திரிகையும் பின் நடந்ததும்.

சர்க்கார் தரப்பு வக்கீல் உட்கார்ந்ததும் மேஜிஸ்ட் ரேட்டார் தன் கைவசம் இருந்த காப்தம் ஒன்றைபடிக்க அது எதிரிகளை 120 B, 505, 131, 117, பிரிவுகள்படி குற்றம் ஏற்படுத்தியுள்ள குற்றப் பத்திரிகையாயிருக் கிறது. எதிரிகள் செஷனில் விசாரணை எதிர்பார்க்கு மாறு தெரிவிக்கப்பட்டார்கள்.

## குற்றப் பத்திரிகை.

இவ்வேழு எதிரிகளும் 1921-ம் வருஷம் பிப்ரவரி முதல் செப்டம்பர் முடியும் வரை கராச்சியிலும் மற்ற இடங்களிலும் இன்னும் பலர்களுடனும் சேர்ந்து ராஜாவின் ராணுவ சேனையிலுள்ள முகமதிய உத்தி யோகஸ்தர்களையும் சிப்பாய்களையும் தங்கள் வேலையை விட்டுவிடும்படி கலைக்கவேண்டி துர்ஆலோசனை செய்த தால் இக்காச்சி செஷன் கோர்ட்டாரின் அதிகார

எல்லைக்குள்பட்டு இ. பி. கோ. 120 B, 141. பிரிவு களின்படி தண்டிக்ககூடிய குற்றம் செய்திருக்கிறார் களென்றும்.

இவர்களில் முகமத் அலி 1921-ம் வருஷம் ஜூலை மாதம் 9-ம் தேதி வாக்கில், கராச்சியில் பிரிட்டிஷ் ராணுவத்தில் தற்காலம் முஸல்மான்கள் இருந்து உத்தியோகம் வகிக்கவும், சேரவும், அதில் சேரும்படி பிறர்களை தூண்டவும் செய்வது முகமதியர்களுக்கு முறையில்லையென்றும் சொல்லி கலைக்கவும் கலைக்கக் கூடியதுமான காரியம் செய்ததால் 505 வது பிரிவுப் படி குற்றம் செய்திருக்கிறாரென்றும்,

இன்னும் 2 முதல் 7 வரை எதிரிகளும் 1-ம் எதிரி முகமத் அலியுடன் சேர்ந்து அவர் 505 வது பிரிவுப்படி குற்றம் செய்யுமாறு சேர்ந்து சதியாலோசனை செய்ததால் 505 வது பிரிவுடன் 109 வது பிரிவுப் படி குற்றம் செய்திருக்கிறார்களென்றும்,

இன்னும் 1-ம் எதிரி முகம்மத் அலி 10 பேர்களுக்கு மேற்பட்ட கூட்டத்தில் இருந்து கொண்டு கான்பரன்ஸில் அத்தீர்மான மூலம் பகிரங்கப்படுத்தியதால் 121-வது பிரிவுப்படிக்கும் குற்றம் செய்திருக்கிறாரென்றும்,

2 முதல் 7 வரை எதிரிகளும் கூட இருந்து மேலே சொன்ன 121 வது பிரிவுக் குற்றம் செய்ய உடந்தையாய் இருந்ததால் அவர்களும் 117, பிரிவுப் படி குற்றம் செய்திருப்பதாகவும்,

இன்னும் குற்றப்பத்திரிகை வாசிக்க வேண்டிய முறையை அனுஸரித்து எவ்வாசகம் எழுத வேண்டுமோ அவ்வாறு எழுதி இவ்வெழுவர் மீதும் குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது.

இந்த விதமாக மேலே குறிக்கப்பட்ட விசாரணையில் இவ்வெழுவர் மேலும் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்ட பிறகு, மௌலானா ஷௌகத் அலியின்மேல் தனிமையாக ஒரு குற்றம் விசாரிக்கலாயிற்று. அதாவது 1921ம் வருஷம் ஜூலைமாதம் 11ம்தேதி வாக்கில் கிலாபத்கான்பரன்ஸில் பிரஸங்கம் செய்ததின் மூலம் பிரிட்டிஷ் இந்தியாவில் நியாயப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ண்மெண்டாரிடம் அப்ரீதி உண்டாகுமாறு செய்ய எத்தனித்தார் என்றும், நமது அரசரின் பிரஜைகளான ஆங்கில இந்திய வகுப்பினர்களுக்குள் வெறுப்பும் விரோதமும் மேற்கண்ட பிரஸங்கத்தால் உண்டு

பண்ண எத்தனித்தார் என்றும், இவைகள் மூலம் இ. பி. கோ. 120A, 153 A பிரிவுகளின்படி குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டது.

இதன் பிறகு முகம்மத் அலியின்மேல் ஏற்படுத்தப்பட்ட 124A பிரிவுபபடியுள்ள கேசு எடுத்துக் கொள்ளப்பட்டது. கராச்சியில் ஜுலைமாதம் 10ம் தேதி இத்காமைதானத்தில் (Idgah Maidan) சுமார் 3000 ஹிந்து முகம்மதியர்கள் கூடியிருந்த இடத்தில் முகம்மத்அலி உர்துபாஷையில் ஒரு பிரஸங்கம் செய்ததாக போலீஸ் சாக்ஷியம் கொடுக்கப்பட்டது. உடனே மேஜிஸ்ட்ரேட்டு—“இத்கார் மைதானத்தில் நீர் பிரஸங்கித்திரா?

முகமத் அலி:— நான் ஒரு பிரஸங்கம் செய்துள்ளேன். அது எந்த மைதானமென்று எனக்கு தெரியாது.

இதன் பிறகு இந்த கேசில் விசாரிக்கப் பட்ட சாக்ஷிகளின் மூலம் தாக்கலான குறிப்புகளையும் உர்துப் பிரசங்கத்தையும் பார்ப்பதற்கு 1-10-21 வரைவாய்தா தள்ளிவைக்கப் பட்டது.

1.10-1921-ல் இந்த கேசை எடுத்து விஜாரிக்கும் போது முகம்மது அலி கொடுத்த விவரப்பத்திரிகை யாவது:—

சிற்சில இடங்களில் எனது பிரசங்கத்தை விட்டு இருப்பினும் பொதுவாய் இங்குதாக்கல் செய்யப்பட்டது எனது பிரஸங்கமேதான். நான் ஜனங்களை பலாத் காரத்துக்கு தூண்டவில்லை. நான் பேசியது மூலம் ஜனங்கள் மூர்க்கமானுகள் என்று சொல்ல இடமில்லை. எனது அருமைத் தலைவரான மகாத்மா காந்திக்கும் வைஸராய்க்கும் நடந்து வந்த காய்தப் போக்கு வரத்திலும் பலஜனக் கூட்டங்கள்முன் செய்த பிரஸங்கத்திலும் பல பத்திரிகைகள் எழுதி வந்த வியாஸங்களிலும் கவர்ன் மெண்டார் முஸல்மான்களின் எண்ணத்துக்கு விரோதமாக செய்த செயல்களாலும் பஞ்சாப் விஷயமாய் அவர்கள் நடந்து கொண்ட காரியத்தாலும் எப்போதும் தற்கால ஆக்ஷிமுறை (The present System)க்கு விரோதமான அதிருப்தியும் அப்ரீதியும் அமைதியுடன் உண்டுபண்ணுவது எங்கள் கடமையெனக் கொண்டது விளங்கும். இவ்வாறு செய்தலால் தற்கால ஆக்ஷிமுறை கடாசியாக ஒன்று சீர்த்திருத்தப்

படவேண்டும் அல்லது இம்முறை ஒழியவேண்டுமென் பது எங்கள் எண்ணமென்றும் அதற்காக வேலை செய் கிறேமென்றும் தெரியவரும். அதனால்தான் நான் இத்காவில் பேசியபோது கவர்ன்மென்டின் தற்கால ஆக்ஷிமுறையில் ஒரு அப்ரீதியும், வெறுப்பும் உண்டாக வேணுமென்று சொன்னேன். அதே பிரசங்கத்தில் அஹிம்ஸையைப்பற்றி வெகுவாய் எடுத்துச் சொன் னேன். அத்துடன் எப்படி பிரிட்டிஷ் சேனைபலம் அதிகமில்லாத காலத்தில் இந்தியாவில் சுயராஜ்யத்தை இழந்தோமோ அப்படியே அவர்களுக்கு விரோத மாக அதேவிதமான சேனைபலம் கூட இல்லாமலே ஸ்வயராஜ்யம் பெறுவோம் என்று வெகுவாய்ச் சொன்னேன்.

அன்னிய உடுப்பினால்தான் இந்தியர் ஒரு அடி மைக்குடி நாடாயிற்று என்றும், முன்சுயேச்சை மறு படியும் அடையவேணுமாயின் சர்க்கா என்னும் கை ராட்டினத்தை எடுத்துக் கொள்ள வேணுமென்றும் சொன்னேன்.

இந்த கைராட்டினத்தை பிரிட்டிஷ் மெஷின் துப்பாக்கிக்கு ஒப்பிட்டேன். அவைகளின் வித்தியா ஸம், துப்பாக்கி சில நூற்று கணக்கான ஜெனங்களுக்

குள்ளவற்றைத்தான் சுடும். ஆனால் இந்த கராச்சியில் சுற்றும் கைராட்டினம் 7000 மைலுக்கப்பால் உள்ள லங்காஷைரைத் (ஆங்கில நாட்டில் வேஷ்டி வகையரு மிஷினால் நெய்யுமிடம்) தகர்த்துவிடும் என்று சொன்னேன் * * * ஸ்வராஜ் என்றது ராஜஸேவையல்லவென்று சொன்னேன். ஸ்வராஜ் என்பதே எல்லாவற்றிற்கும் மேம்பட்டது. அதை அடைவதற்கு எல்லாரும் எல்லாவற்றையும் விட்டு விடத்தயாராக இருக்கவேண்டும் * * * இவ்வாறு சொல்லியதற்கு ஒரு பொய்யான நோட்டீசு (கவர்ன்மெண்டு நோட்டீசு) மூலம் நான் ஜனங்களை உக்கிரஹத்துக்கு கிளப்பி தூண்டிவிடுகிறேனென்று வெளியிடப் பட்டது. அதற்கு சாக்ஷியம் எங்கே? பிரஸங்கம் செய்ததன் சாக்ஷியம் நிரம்பியிருக்கிறது. எனக்கு வாரண்டு பிறப்பிவித்தமகான் ஸௌக்கியமாய் இருக்கிறார்-கடவுள் முன்பாகவும் மனிதன் முன்பாகவும் அஹிம்ஸாவிரதத்தை அனுஷ்டிப்பதாக பிரமாணம் செய்ததால் இவ்விதம் சொல்ல ஏற்பட்டது.

(பிறகு பஞ்சாப் குற்றங்களையும் கீழ் நாட்டில் பிரிட்டிஷாரின் ஆக்ஷிமுறை (Policy)யையும் எடுத்துப் பேசி முடித்தார்)

## சர்க்கார் தரப்பு வக்கீல் சொன்னதாவது.

இந்த கேசிலும் முந்திய கேசிலும். தனக்கும் தன் சகோதரருக்கும் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப் பட்ட உறுதிமொழியைப்பற்றி சொல்லி வந்ததால், இந்தியா கவர்ன்மெண்டாரால் மேமீ 30ம் தேதி வெளியிடப்பட்ட பிரசுர நோட்டீசில் (Communique) அலி சகோதரர்களுடைய சில பிரசங்கங் களைப்பற்றி நடவடிக்கை நடத்தத் தீர்மானித்து விட்டதாகவும், எதிரி ஜனங்களை உக்கிரகத்துக்கு தூண்டிவராதவரை அந்த பிரசங்கங்களைப் பற்றி யாதொரு கேசு அல்லது நடவடிக்கை நடத்தப் போவதில்லை என்று உறுதிமொழி கொடுத்ததாகவும், வெளியிடப்பட்டது என்பது இப்போது தெரிவிக்க அவசியமாகிறது. அந்த உறுதிமொழி கொடுத்ததால் அலி சகோதரர்கள் தோணுகிறவரை அப்ரீதியை உண்டு பண்ண இடங்கொடுக்கவில்லை.

மேஜிஸ்ட்ரேட்டார் முகம்மத் அலியின் பேரில் 124A பிரிவுப்படி குற்றப்பத்திரிகை வாசித்து தனது தரப்புக்கு யாராவது சாக்ஷிகள் உண்டாவென்று கேட் டார். முகம்மத் அலியும் "கிடையாது" என்றார்.

# அத்தியாயம். 10

## முகம்மத் அலியின் எழுத்துமூலம் ஆஜர் செய்யப்பட்ட ஸ்டேட்மெண்டு.

"1920ம் வருஷம் ஜூன் மாதத்தில் இஸ்லாத்துக்கும் அம்மத நிபுணர்களின் அபிப்பிராயத்துக்கும் இணங்க, மத்திய கிலாபத் கமிட்டியார் கவர்ண்மெண்டாருடன் போர்புரியாமலும் வேற்று நாட்டிற்கு செல்லாமலும், ஒருமுறையைக் கைக்கொண்டு தீர்மானிக்கலானார்கள். இந்த கவர்ண்மெண்டுடன் ஒத்துழைப்பதை நிறுத்திவிட தீர்மானிததார்கள். இவ்விதமாக இந்த ஆக்ஷிக்கு ஒருவித தடங்கல் செய்வதுடன் கவர்ன்மெண்டால் கிலாபத்துக்கும் இஸ்லாத்தும் செய்யப்படும் விரோதக் காரியத்துக்கு உடந்தையாயிருக்காமல் இருப்பதாகவும் தீர்மானித்தார்கள்.

* * * *

(இதன் பிறகு கொரான் என்றும் வேத சாஸ்திரத்தில் சொல்லி யிருக்கும் வெகு முக்கியமான விஷயங்களை சொல்லி, பிறகு ஒரு முகம்மதியன் மற்ற

முகம்மதியரிடம் எவ்வாறிருக்க வேணுமென்று கூறு வதை யெல்லாம் எடுத்துக்காட்டி யிருக்கிறார். ஐதீகப் பிரமாணங்கள், ஸம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் சவிஸ்தாரமாக கூறியிருக்கிறார்.)

* * * *

நான் இதுவரை சொல்லாமல் காரணத்துடன் விட்டுவிட்ட இரண்டு ஐதீகஸம்பிரதாயங்களை அழுத் தத்துடன் சொல்லுகிறேன். ஹஜரத் உமார் குமார ரான ஹஜரத் அப்துல்லாவால் கூறப்பட்ட இந்த ஹாதீஸைப்பாருங்கள்:

"காபாவைச் சுற்றியுலாவும் போது நபி இவ்வாறு சொல்வதை பார்த்தேன் ஓ, காபா, நீ எவ்வளவு அழகு! உனது காற்று எவ்வளவு பரிசுத்த முடை யது எவ்வளவு புனிதமுற்றாய்! ஆயினும் கடவு ளிடத்தில் விச்வாஸத்துடன் ஈடுபட்டவர்களது தூய் மையும் அவர்களது உதிரப்புனிதமும் உன்னிட முண்டோ!" எங்கள் மதவிபட்ச (infidel) கவர்ண் மெண்டு முஸல்மானது உயிரையும் சொத்தையும் காப் பாற்றி புனிதத்தையும் மரியாதை செய்ய முஸல்மான்

களிடம் தெரிவித்த விஷயமாக, இக்கவர்ண்மெண்டு 6 முகமதியர்களையும் வைதீக தலைமை வகிக்கும் ஒரு ஹிந்துவையும் விசாரணை செய்கிறது.

இவ்விஷயத்தைபற்றி கடைசியாக கூறிய பெரியவரின் வார்த்தையை இப்போது கூறப்போகிறேன். மூன்று மாதங்கள் முன்னதாகத்தான் மொத்தத்துக்கு லக்ஷத்தி எழுபத்தையாயிரம் பேர்கள் பின் தொடர சென்று விண்ணுடைடைந்தார். அங்கு கூடியிருந்த ஜனத்திரள்களை உற்றுநோக்கி அன்று என்ன தினமெனக் கேட்டார். அனைவர்க்கும் அவர் தெரிந்து கேட்கிறார் எனத்தெரியும்: ஆயினும் எக்காரணம் பற்றிக் கேட்கிறார் என்பது தெரியாமல் "ஆண்டவருக்கும் நபிக்கும் தான் நன்றாய்த் தெரியும்" என்றார்கள். உடனே இது என்னமாதமென விசாரித்தார். அதே பதில் உரைத்தார்கள். கடைசியாக இது என்ன நகரமென்று கேட்டார். அதே பதில் கொடுக்கப்பட்டது. உடனே அவர் கூறினார்:

*  *  *  *

"ஜாக்கிரதை. இன்றைநாள் இம்மாதம் இந்நகரில் நான் போனபின் ஒருவர் கழுத்தை ஒருவர் அறுத்துக் கொண்டு நாஸ்திகராய் விடாதீர்கள். ஜாக்கிரதை!"

இதேவித நாஸ்திகத்துக்கு முஸ்லிம் சேனைகளை இழுக்க கவர்ண்மெண்டு ஆரம்பிக்கிறது. இவ்வாறு பெரியவர் கூறிய சமாசாரத்தை சொல்லி நியாபகப் படுத்தினால் இக்கவர்ண்மெண்டு எங்கள்பேரில் நடவடிக் கைகள் நடத்துகிறார்கள். பிரிட்டிஷ் அரசர்கள் எல் லோரும் கொடுத்த அறிக்கைப்பத்திரங்களுக்கு விரோ தமாக இவ்வாறு செய்கிறார்கள்.

இஸ்லாம் சட்டத்தை மனதில் படும்படி ஒரே விஷயம் சொல்லுகிறேன். விக்டோரியமகாராணியார் இந்நாடையாளப் புகுமுன் நடந்த சிப்பாய்கலகம் எத னால் ஏற்பட்டது? தோட்டாச் சுருள்கள் பசு, பன்றி இவைகளின் கொழுப்புடன் சேர்த்து கொடுக்கப்பட்ட தாகவந்த பிரஸ்தாபத்தினால் உண்டாயிற்று. ஒரு பன்றியின் உயிரை பலவந்தத்தில் எடுத்துவிட்டாலும் ஒரு முஸல்மான் விடலாம். அவ்வாறு செய்யாமல் போனால் தனக்கு சாவுகிடைக்குமென்று பயமும் பல வந்தமும் வந்தகாலத்தில் அப்படி கொல்லாவிட்டால் அது பாவம் கூடஆகும். அப்படிப்பட்ட பலவந்தத் துடன் வேறொரு முஸல்மானை கொல்லும்படி நேறிட் டால் அப்போதுகூட முஸல்மானை கொல்லக்கூடாது. மனத்திற்குள் இஸ்லாமபிமானியா யிருந்து வெளியில்

இஸ்லாத்தை மறுத்தாலும் மறுக்கலாம். ஆனால் ஒரு முஸல்மானின் ரத்தத்தை சிந்தக்கூடாது. அப்படியிருக்க ஒருவன் ராணுவவேலையில் சேருமுன் அவனை அம்மைகுத்திக் கொள்ளஇஷ்டமா என்று கேட்டு இரக்கம் காண்பிக்கும் கவர்ண்மெண்டு சமய நிலைதவறுதலையும் பன்றியிரைச்சி சாப்பிடுவதையும் விடக்கொடிதான காரியத்தை ஒரு முஸல்மான் செய்யுமாறு பலவந்தப்படுத்துகிறது. மத விஷய இடங்கொடுத்தல், மூன்று சக்கரவர்த்திகளின் அறிக்கைப் பத்திரங்கள்படி நடத்தல், என்னும் விஷயங்களில் கவர்ண்மெண்டார் பெருமைப்படுத்திக் கொள்ள விரும்புவார்களானால், நாங்கள் எல்லோரும் முஸ்லிம் படைகளை சேனை வேலையிலிருந்து விலகிக் கொள்ளச் சொன்னது எங்கள் மார்க்கத்துக்குரியதும் நியாயத்துக் குரியதுமான எங்கள் கடமையை நாங்கள் செய்தோமென்றும், ஆதலால் மத விஷயத்தில் பாபியாகவாவது, அரசுமுறையில் குற்றவாளிகளாகவாவது, நாங்கள் ஏற்படவில்லை என்றும் எண்ணுவார்களாக.''

* * * *

மேற்கூறியபடி எதிரிகள் எழுவரையும் செஷன்ஸ் கோர்ட் விசாரணைக்கு உத்திரவு செய்த பிறகு மேஜஸ்த்திரேட்டான மிஸ்டர் தாலத்தி இன்னும் சாக்ஷிகள் விசாரிக்க அபிப்பிராயப்பட்டு எதிரிகள் முன்னிலையில் ஜெயிலுக்குள் சில சாக்ஷிகளை விசாரித்தார். இவ்விஷயத்தைப்பற்றி அனேக பத்திரிகைகளும் சட்டநிபுணர்களும்சட்டத்துக்கும் நியாயத்திற்க்கும் ஒழுங்கு முறைக்கும் இத்தகைய நடவடிக்கை விரோதம் என்று எடுத்துக்காட்டினார்கள்.

பிறகு செஷன் விசாரணை அக்டோபர் மாதம் 24-ந் தேதி நடந்தது.

---

# அத்தியாயம். 11

## செஷன்ஸ் விஜாரணையும் அதன் ஏற்பாடும்.

ஸிந்துநாட்டு ஜுடிஷியல் கமிஷணரான மிஸ்டர் J. C. கென்னடி (Mr. J. C. Kennedy) முன்பாக விஜாரணை யாயிற்று. கீழ்க்கோர்ட்டில் நடந்தது போல் இங்கேயும் டிக்கட்டுகள் கொடுக்கப் பெற்றோர்களே கோர்ட்டுக்குள் விடப்பட்டார்கள். வேடிக்கை பார்க்க வந்தோர்களில் பல்லோர்கள் ஐரோப்பிய பெண்பாலர்களாயும் இருந்தார்கள்.

போலீஸ், ராணுவ, பந்தோபஸ்து வெகு மும்முரமாகவே யிருந்தது. கீழ்க்கோர்ட்டில் இருந்த கூட்டத்தைவிட அதிக ஜனங்கள் வந்தார்கள். கவர்ண்மெண்டார் தரப்புக்கு உதவியாக மதக்கோட்பாடு விஷயங்களில் தேர்ந்தவர் வருவதாக பிரஸ்தாபிக்கப் பட்டபடி யாதொருவரும் காணேம். ஆனல் எதிரி

களே மதக் கோட்பாடுகளறிந்த மஹான்களாயினும் பரங்கிமஹல் மௌல்வி இனயத்துல்லா என்ற பெரியவர் எதிரிகள் பக்கத்தில் இருந்து உதவிபுரிந்தனர்.

வாதி தரப்பு வக்கிலான மிஸ்டர் டி. ஜி. எல்பின்ஸ்டோன் என்பவருக்கு உதவியாக அலகபாத்து மிஸ்டர் ஸி. ராஸ் ஆல்ஸ்டன் (Mr. C. Ross Alston) வைக்கப்பட்டார்.

சர்க்கார் தரப்பு வக்கீல் கோரிக்கையின் மேல் குற்றப்பத்திரிகையின் வாசகத்தை சற்று மாற்றப்பட்டது. முகம்மது அலி இதற்கு ஆக்ஷேபித்தார். கோர்ட்டாரும் ஆக்ஷேபணையை ஏற்றுக்கொள்ளவில்லை. பிறகு குற்றப்பத்திரிகையை வாசிக்கப்பட்டது. எதிரிகள் குற்றவாளிகள் என்ருவது இல்லையென்ருவது சொல்லவில்லை.

உடனே சர்க்கார் தரப்புக்கு ஐந்து ஜூரர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களாவன —

மெஸ்ஸர்ஸ். தயாராம் கிடுமால். ஸி. டிஸௌஸா ராமச்சந்த் துளசிதாஸ், ஆர். டீக்ருஸ், டி. கிரிச்செல். இவர்களுடைய பேர்கள் போடப்பட்டிருந்த ஒரு பெட்டியிலிருந்து ஜட்ஜால் எடுக்கப்பட்டு பேர்கள் வாசிக்

கப்பட்டன. வெளியிலெடுக்கப்பட்ட துண்டுகள் மடிக்கப் படாமல் பிறித்தப்படியே யிருந்ததாக தெரிந்தது. முதலாவது ஜூரரான தாயாராம் கிடுமால் என்பவர் போர்ப்ஸ் அண்டு கோ (Forbes & Co.,) என்ற கம்பெனியில் குமாஸ்தா வயது சுமார் 22. ராமசந்த் துளஸிதாஸ் என்பவரும் டிஸௌஸா என்பவரும் ராலிபிரதர்ஸ் என்ற கம்பெனியில் குமாஸ்தாக்கள். பாம்பே கம்பெனி என்றதில் குமஸ்தா டீக்ருஸ் என்பவர். கிரிச்செல் என்பவர் கஸ்டம் ஆபீஸில் குமாஸ்தா. இவர்கள் தான் சர்க்கார்தரப்பு ஜூரர்கள்.

இவர்களைப்பற்றி அதிகம் எழுதுவது நன்றாய் இராது. தெய்வாதீனத்தால் ராலிபிரதர்ஸ் ஆபீஸிலிருந்து இரண்டு பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு யார் என்ன செய்யலா மென்றாலும் இவர்கள் ஜூரர்களாய் வந்தது விபஸ்ணிக்கத்தக்கதே. கிரேக்கர்கள் அங்கோரா தேசத்தின்மேல் படையெடுத்து அக்கிரமம் செய்தபோது கிரேக்கர் ராஜாங்கத்து மந்திரியாயிருந்தவர் இந்த ராலி பிரதர்ஸின் சொந்தக்காரர். சீமையில் சோட்டாணி சேட்டவர்கள் போயிருந்த போது அவர்கள் தகவல் கொடுத்து மத்திய கிலாபத் கமிட்டியாராலும் அதற்குட்பட்ட

மற்ற கிலாப்த் கமிட்டியார்களாலும் இந்த கம்பெனியை பகிஷ்காரம் செய்யவேணுமென்று அடிக்கடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்படிப்பட்ட கம்பெனியின் இரண்டு வேலைக்காரர்கள் ஜூரர்களாக வந்தது கொஞ்சம் துர்ப்பாக்கியமே.

குற்றப்பத்திரிகையின் வாசகத்தை மாற்றிய விஷயமாக முகமத் அலி ஆக்ஷேபித்தார். கீழ்க் கோட்டில் இது விஷயத்தைப்பற்றி யாதொரு பிரஸ்தாபமும் இல்லாமல் இப்போது திடீரென்று மாத்தியது சரியல்லவென்றும், சட்டப்படி விவரப்பத்திரிகை எதிரிகள் கொடுக்கும்போது கீழ் கோர்ட்டு மேஜிஸ்ட்ரேட்டார் வாங்க மறுத்தது பிசகென்றும், முழு விவரப்பத்திரிகைகளும் கொடுபடு முன் குற்றப் பத்திரிகை வாசித்தது நியாயத்தவறு என்றும் எடுத்துக் காட்டினார்.

கோர்ட்டார் இவ்வாறு வெகு அதிகமாக சம்பந்தமில்லாததை எடுத்துக் கூறவேண்டாமென்று சொன்னார்.

முகமத் அலி தனது மதத்தால் தூண்டுதல் செய்யப்பட்டதின் நிமித்தமாக தான் செய்த காரியத்தையும், லௌகீக நியாயப்படி கோர்ட்டால் தனக்கு

கொடுக்கவேண்டிய சட்டக்காப்பையும் பற்றி தெளி வாய் வெளியிட வேண்டியது தன் கருத்தென்றும், கீழ்க்கோர்ட்டு விசாரணை ஆரம்பிக்கும்போதே செஷ னுக்கு அனுப்ப தீர்மானித்து விட்டதாக காண்பித்து விட்டாரென்றும் அப்படி செய்தது பிசகென்றும், செஷன்ஸ் விசாரணைக்காக பிரதம விஜாரணை பூராவாக முடியுமுன் ஜுடிஷியல் கமிஷனர் கோர்ட்டுக்கு வந்து இடம் போருமாஎன்று பார்த்ததும், கவர்ண்மெண்டும் இந்திய மந்திரியும், வைஸிராயும், எப்படியாவது எதிரி கள்மேல் கேஸ் நடத்தவேணுமென்று தீர்மானித்த தால் எப்படி வேணுமென்றாலும் நியாய யுக்தாயுக்த (discretion)த்தை உபயோகிக்கலாமென்று எண்ணின தும் வெகு கேவலத்துக்கு இடமென்றும் சொன்னார்.

## டாக்டர் சிக்லு.

இம்மாதிரி குற்றப்பத்திரிகையை மாற்றியதால் இந்த கேசே புதிதாக வேறொன்றாய்விட்டது. கீழ்க் கோர்ட்டார் குற்றத்தை ஊனமாகவும் பயனற்றதாக வும் வரையற்றதாயும் செய்திருக்க, இப்போது அக் கெடுதல்களை மாற்றி வேறு உருவம் கொடுப்பது இந்த செஷன்ஸ் கோர்ட்டு நடவடிக்கை நாடகத்தின் இரண் டாவது அங்கம்போல இருக்கிறது என்றார்.

கோர்ட்டார் "குற்றவாளியா? இல்லையா?" வென்று கேட்டதற்கு, சிச்லு "இந்த கோர்ட்டில் குற்றவாளி அல்லது இல்லையென்று கூற மாட்டோம்" என்றார்.

## ஷௌகத் அலி.

ஷௌகத் அலி உர்துவில் "இந்த கோர்ட்டில் நாங்கள் வாதிக்க இஷ்டப்படவில்லை. உலகத்துக்கு தோன்ற நாங்கள் சுயேச்சை யடைந்தவர்கள். நிரப ராதிகள் என்று கூறுவோம்" என்றார்.

## பீர்குலாம் மஜதீத்.

உர்துவில் இவர் கோர்ட்டாருக்கு தெரிவித்ததா வது:—இரவில் அகாலமான நேரங்களில் பலர்கள் தாங்களாக வந்து அனுவசியமாக எனக்கு தொந்திரவு கொடுக்கிறார்களென்று இக்கோர்ட்டாருக்கு தெரிவிக் கிறேன். ராஜ துரோகம் என்ற குற்றமான இ. பி. கோ. 124 A. பிரிவுக்கு ஹைதராபாத் (ஸிந்து) ஸெஷன்ஸ் கோர்ட்டில் சிக்ஷிக்கப்பட்ட பீர்துராப் அலிஷா என்ற ஒரு கைதியை யாதொரு மானம் இல் லாமல் ஜயிலில் இரவில் என்னிடம் வரும்படி செய்து, கடவுளிடம் நான் செய்யும் கடமை சேவ

கத்திலிருந்து என்னை ஏமாற்றி இழுக்க பிரயத்தனம் செய்யப்பட்டது. அவன் என்னிடம் கலெக்டராலும் அவருக்கு மேலுள்ள அதிகாரிகளாலும் என்னிடம் அனுப்பப்பட்டதாகவும், ஜயிலில் என்னை 5 வருஷத்துக்குமேல் கடினகாவல்வைத்து ஹிம்ஸை ஏற்படுமென்றும் பயமுறுத்தச்சொன்னதாகவும், தானியங்களை மாவாக திரிக்கும் வேலை செய்யச் சொல்லப்போவதாயும் உரைத்தான். இஸ்லாத்திற்காக இம்மாவரைப்பது மட்டுமில்லாமல் உயிரைக்கொடுக்கவும் தயாராக இருக்கிறேன். இம்மாதிரி செய்கை மரியாதையற்றதும் என் மதத்தை ஏளனம் செய்ததாகவும் கருதுகிறேன். இந்த கோர்ட்டுக்கு இவ்வித மனிதர்களை இரவில் என்னிடம் அனுப்புவதை தடுக்க சக்தியிருக்கிறதா என்று கேட்கிறேன்.

(இப்படி பீர் குலம்மஜதீத் சொல்லிக்கொண்டு வருகையில் கோர்ட்டார் ஏதோசொல்லி நிறுத்திவிட்டார்).

முகமத்அலியும் இந்த வித ஸம்பவம் சொல்ல கேசு முடிந்தபிறகு அதை கவனிப்பதாக கோர்ட்டார் தெரிவித்தார்.

## கோர்ட்டும் ஸ்ரீ சங்கராச்சாரியாரும்.

முகம்மது அலி, குரு சங்கராச்சாரியாருக்கு ஏற்பட்ட மரியாதையுடன் கோர்ட்டில் கூறப்படவில்லையென்றும், ஏதோ வெங்கட்டராமன் என்று சொல்லப்பட்டிருக்கிறதென்றும், பிரகிருதத்தில் தன்போன்ற முகம்மதியர்களில் மௌலானாவென்றும், மௌல்வி என்றும், பீர்என்றும் இருப்பவர்களை இப்பட்டங்களை வைத்துக் கூப்பிடாவிட்டாலும் பாதகமில்லையென்றும், சங்கராச்சாரியார் தனது முந்திய ஆச்ரமத்தின் பேரை முற்றிலும் மாற்றிக்கொண்டு வேறு ஆச்ரமமான துறவியறம் பூண்டு சன்னியாசியானதுபற்றி அவ்வாறு அவமரியாதை செய்யக் கூடாதென்றும் சொன்னார்.

கோர்ட்டு: அவர் தன்னை ஒரு சங்கராசாரியென்று சொல்ல எதிர்பார்க்கிறார்.

முகமதுஅலி: நாமெல்லாரும் நாம் இருக்கிறது போல சொல்லிக்கொள்ள எதிர்பார்க்கிறோம். ஆனால் மரியாதையும் கன்னியதையுமுள்ள பட்டத்துக்கு குந்தகமில்லாமலிருக்க ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். இத்தகையபட்டம் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டதே.

சங்கராச்சாரியார். "எமது பட்டம் உபயோகப் படுத்தாவிடினும் நமது நாமம் பாரதி கிருஷ்ணதீரத்." என்று உட்கார்ந்தபடியே சொன்னார்.

கோர்ட்டு. 'ஏதேனும் சொல்ல வேணுமாயில் நிற்பீர்.'

சங்கராச்சாரியார். 'நம்மால் முடியாதகாரியம். எங்கள் ஆச்ரமத்துக்கு ஒத்ததன்று.'

கோர்ட்டார் முகம்மதுஅலியை மற்றவர்களுக்காக பேசக்கூடாதென்று சொன்னார்.

பிறகு பீர்குலாம் முஜதீத்தின் சமாசாரத்தை மறுபடியும் கோர்ட்டார் கேட்டார்.

---

# அத்தியாயம். 12

## விசாரணை.

இவ்விசாரணை அக்டோபர் மாதம் 24-ம்டை திங்கட்கிழமை நடந்தது. செஷன்ஸ் விசாரணையின் மாமூலான முறைப்படி எதிரிகளை குற்றவாளியா இல்லையாவென்று கேட்கப்பட்டது. எதிரிகள் குற்றவாளி களென்ருவது இல்லை யென்ருவது சொல்லவில்லை. குரு சங்கராச்சாரியாரும் கோர்ட்டாரிடம் பேசும் போது நிற்காமல் உட்கார்ந்தே யிருந்தார்.

ஜூரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை சர்க்கார் தரப்பு வக்கீலான மிஸ்டர் டி. ஜீ. எல்பின்ஸ்டன் பார்த்து இந்தக் கேஸ் விஷயமாக பேச ஆரம்பித்தார். எதிரிகள் பேரில் கொண்டு வரப்பட்ட குற்றங்களின் அம்சங்களை விறித்தெடுத்துக் கூறப்பட்டது. ஜூலை மாதத்தில் கராச்சியில் கூடினகிலாபத்து கான்பரன் ஸில் எதிரிகளால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை யும் கோக்கக்கில் நடந்த கான்பரன்ஸின் தீர்மானத் தையும் ஜூரர்களுக்குப் படித்துக் காட்டப் பட்டது.

பிறகு ஸிந்து ஸி. ஐ. டி. டி. எஸ். பி. மிஸ்டர் அமன்ஷாவும் கையெழுத்து விஷயத்தில் சமர்த்தரென கவர்ண்மெண்டாரால் கருதப்படும் மிஸ்டர் புருஸ்டர் இவர்கள் சாக்ஷியம் கொடுத்தார்கள்.

பூனா சப் இன்ஸ்பெக்டர் துரும்சந்தும் ஜெயிலரும், வால்டேர் ஜெயிலரும், கராச்சி டிஸ்டிரிக்ட் ஜெயிலரும் இன்னும் சிலரும் விசாரிக்கப்பட்டார்கள்.

இவ்விதமாக வாதி தரப்பு சாக்ஷிகளெல்லாம் குறுக்கு விசாரணை யில்லாமலே விசாரிக்கப் பட்டார்கள். உடனே ஜட்ஜ் அவர்கள் கீழ்கோர்ட்டில் எதிரிகளால் கொடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்ட்டுகள் சட்டப்படிக்கு இல்லையென்றும் கூறினர்.

அப்போது முகம்மத்அலி கீழ்கோர்ட்டில் தான் கொடுத்த விவரப்பத்திரிகை தஸ்தாவேஜிலேயே இருக்கவேணுமென்றும் அது இருந்தால் தன்னுடைய சாக்ஷியத்தை அது தெரிவிக்குமென்றும் இந்தியன் பீனல்கோட் என்னும் சட்டத்திற்கு மேலதாகவுள்ள இஸ்லாமின் கோட்பாடுக்கும், கொருனின் கற்பனைகளுக்கும் ஒத்ததாய் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென்றும், யாதொரு பின்னமில்லாமல் நிச்

சந்தேகமாய் விக்டோரியா மகாராணியார் கொடுத்த அறிக்கைப் பத்திரத்தின்படி ஜாதி மத கொள்கைகளின் சுயேச்சையை முன்னிட்டு எதிரிகளினுடைய காரியம் ஞாயமென்றும் இன்னும் பல விதமாகத் தெரிவித்தார்.

எதிரிகளினுடைய ஸ்டேட்மெண்டுகள் கோர்ட்டாருக்கும் ஜூரர்களுக்கும் வாசிக்கப்பட்டது.

பிறகு முகமத் அலி இந்தக் கோர்ட்டில் புதிதாக வேறு ஸ்டேட்மெண்டு குடுக்கப்போவதில்லை யென்று சொன்னார்.

இரண்டாவது எதிரி ஹூசேன் அகமதும், டாக்டர் கிச்சுலுவும், மௌல்வி நிஜார் அகமதும் யாதொரு கேழ்விகளுக்கும் பதில்சொல்ல மறுதளித்துவிட்டார்கள்.

ஆருவது எதிரியான குருசங்கரா[illegible] உத்தரமும் நின்று சொல்ல முடியாதென்று [illegible] கோர்ட்டாரும் உட்கார்ந்தபடியே சொல்ல உத்தரவு கொடுத்தார். அவர் தான் மேற்கண்ட தீர்மானத்தை ஆதரித்ததாகவும் இந்துக்கள் அவ்வித தீர்மானத்தை ஆதரிக்கவேண்டியது முற்றும் அவசியமென்றும் இன்

17626
600 008

னும் முகமதியர்கள் செய்ததுபோல எல்லா இந்துக் களும் செய்யவேணுமென்று தான் உபதேசம் செய்யத்தயாராயிருப்பதாகவும் கூறினார்.

ஷௌக்கத் அலியோ யாதொரு விதமான பதிலும் சொல்ல முடியாதென்றார்.

எல்லா எதிரிகளும் தங்கள் தரப்புக்கு ஸ்வாமியையும், கொரானையும் தவிர வேறு சாக்ஷியம் இல்லையென்று கூறினார்கள்.

மறுநாளான 27-ம் தேதி மௌலானா முகமத் அலி பலவிடங்களில் பல பேர்கள் பல விஷயமான செய்கைகள் செய்ததாக முன்வரும் சாக்ஷியத்தை வைத்துக்கொண்டு எல்லா எதிரிகளையும் இந்தக் கேசில் ஒன்றாகச் சேர்த்து விசாரிப்பது சட்ட முறைக்கு விரோதமென்று எடுத்துக் காட்டினார்.

சர்க்கார் தரப்பு வக்கீல் உடனே எதிரிகளெல்லோரும் ராஜ அவிஸ்வாச சதியாலோசனை என்னும் விஷயத்தைச்செய்ததாக குற்றம் சாட்டப்பட்டதால் எல்லோரையும் சேர்த்து விசாரிப்பதில் தோஷமில்லையென்று சொன்னார்.

பிறகு சர்க்கார் தரப்பில் வக்கீல் தனது கேசை வாதிக்க ஆரம்பித்தார் :—

முதல்முதலில் எதிரிகள் தாங்கள் செய்ததெல் லாம் தங்கள் மதத்தின்படி உண்டான கடமையென்று ஒவ்வொரு காரியத்திலும் தனது மதத்தை முற் கொண்டு செய்ததாக சொல்லிவிடலாமென்றும் மதச் சட்டத்தை பைசல்செய்ய ஜூரர்களுக்கு அதிகார மில்லையாதலால்இந்தவிதகேஸ்கள் தீர்மானமாவதற்குக் கஷ்டப்படுமென்றும் ஒவ்வொரு மதக்கோட்பாட்டை அம்மதத்திலுள்ளவர்களே வேறுவேறாய் கூறுங்காலத் தில் ஒரு கிருமனல் கேஸில் இவ்விஷயங்களை நுழைப்பது முடியாதகாரியமென்றும் இப்படி மதம், மதம் என்றால் யாதொரு சட்ட அமுலும் நடத்தமுடியா தென்றும் கூறினார்.

ஒரு மதத்தின்படி ஒரு நரபலி கொடுக்கவேணு மென்று சொல்லிக்கொண்டு ஒருவனை ஒருவன் உயிர் வாங்கினால் அது கொலையாகாதோ? ஒரு மதப்படி மசூதிகள் பிசகான காரியங்கள் செய்யும்படியான இட மென்று கூறி ஒருவன் மசூதிகளை இடிக்கலாமோ?

எதாவது ஒரு முகமதியன் இதற்கு இணங்கி மேற் சொன்ன காரியங்கள் அம்மதக்கோட்பாடென்றால் விட்டுவிடுவனோ?

இக்கேசின் விஷயங்கள் சம்பந்தபட்ட மட்டில் எதிரிகள் ஒன்றும் ஆக்ஷேபிக்கவில்லை. தீர்மானம் நிறைவேற்றினதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவ்வாறு செய்ததின் கருத்து என்னவென்பதை கவனிப்பதே நமது காரியமாகும். மேற்படி தீர்மானம் செய்வதால் ஒரு வேடிக்கை காரியம் செய்ததாக எதிரிகள் சொல்லவில்லை. அத்தீர்மானத்தை வெகு ஊக்கத்துடன் நிறைவேற்றியதாயும் அதின்படி வெகு சிரத்தையுடன் எல்லோரும் நடக்கவேண்டியதென்று இவர்கள் கருத்து என்று கூறினார்கள். அப்படி யிருக்கும் பக்ஷத்தில் ராணுவ சிப்பாய்களை தங்கள் வேலையினின்று நீங்கவேணுமென்று எண்ணினார்களென்று ஏற்படுகிறது. ஆதலால் முதற்குற்றம் நிதர்சனமாயிற்று.

இரண்டாவது குற்ற சம்பந்தமாயுங்கூட எதிரிகள் தீர்மானத்தின்படி அமுலுக்குக் கொண்டுவர எண்ணினார்களென்று தெரிகிறது. முகமது அலியும் இதை ஒத்துக்கொண்டும் ஆனால் தங்களது நோக்கம் அதிகமாய் சித்தியடையவில்லையென்று வருத்தப்படுவ

தாயும் கூறினர். இந்த எதிரிகளே மேற்படி தீர்மானத்தின்படி ராணுவ சிப்பாய்களுக்கு வேலையை விடும்படியாக தூண்டுதல் செய்து எழுதினர்களா என்று நாம் கவனிப்பது அனாவசியம். சதியாலோசனைக்காரர்களில் இவ்வெதிரிகளைத் தவிர்த்து வேறு யார் எழுதின போதிலும் போதுமானது. சட்டப்படி யார் இவ்வகை காரியம் செய்தபோதிலும் அது சித்தித்ததா அல்லது இல்லையா என்று கவனிக்க வேண்டாமென்றும் யாராவது ஒருவன் இக்காரியத்திற்கு பிரயத்தனம் செய்தாலே போதுமென்றும் இருக்கிறது.

சாக்ஷிய விஷயமாக இருக்கும் சட்டத்தைப்பற்றி பேசி பிறகு இந்த விசாரணை சாக்ஷியத்தைப் பற்றி கூற ஆரம்பித்தார். சேனையில் சேர வேண்டிய முறையையும் பற்றிக் கூறினர். அவ்விஷயமாயுள்ள சாக்ஷியத்தையும் காட்டினர். தீர்மானங்களின் நோக்கத்தை பகர்ந்தார். சேனையிலிருந்து விலகியவர்களுக்கு வேறு வேலை கிடைக்கும் வரை உதவி செய்ய நிதியேற்படுத்தியதைக் காட்டினர். சந்தேகமில்லாமல் இவ்வெதிரிகளின் எண்ணம் இதனுல் என்ன எற்படுகிறதென்று கேட்டார்.

பிறகு பத்வாக்களைப்பற்றியும் சிறு தூண்டு நோட்டீசுகளைப் பற்றியும் சொல்ல ஆரம்பித்தார். பிப்பரவரி மாதத்திலேயே தூண்டுதலுக்கு சதியாலோசனை செய்யப்பட்டிருக்கிறதென்றும், கராச்சித் தீர்மானத்திலும் கல்குத்தா தீர்மானத்திலும் சேனைகளை ராணுவத்திலிருந்து விலக தூண்டப்படுவதே நோக்கமென்றும், பிறகு இதே எண்ணத்துடன் சில்லெட் (Sylhet) என்ற இடத்திலும் கோக்காக்கிலும் ஜூன் மாதத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதென்றும், கடைசியாக கராச்சியில் கிலாபத் கான்பிரன்ஸில் இத்தீர்மானம் நிறைவேற்றி ஆதரிக்கப் பட்டதென்றும் சொன்னார்.

ஷை தீர்மானம் நிறைவேற்றுங் காலத்தில் எதிரி பேசிய பேச்சுக்களிலிருந்து சிலசில பாகங்களை படித்து காட்டியும், அவைகளிலிருந்து சதியாலோசனையின் எண்ணம் வெளிப்படுவதாயும் சொன்னார். முகமத் அலி அத்தீர்மானத்தின் மேல் முழு ஆதரிப்பு காட்டுவதுடன் இங்கு கொடுத்த ஸ்டேட்மெண்டிலும் அந்த எண்ணத்தை வெளியிட்டும் தீர்மானம் சேனைகளுக்கு தெரிய தான் விரும்புவதாயும் கூறியிருப்பதை எடுத்துக் காட்டினார்.

மௌல்வி ஹுஸேன் அகமத் ஸம்மந்தப பட்டமட்டில் அந்த தீர்மானத்தை அப்போது ஆதரித்தது அல்லாமல் இப்போது இங்கும் ஆதரிக்கிறார்.

டாக்டர் கிச்லு இந்த தீர்மானத்தை ஆதரித்தவரும், எல்லோரும் பகிரங்கமாகுமாறு அச்சிட்டு துண்டு நோட்டீசு அனுப்பிய பம்பாய் கம்மிட்டியின் காரியயாயும், கோக்காக்கில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஆதரித்தவராயுமிருக்கிறார்.

பீர்குலாம் முஜதீத் என்பவர் கராச்சி தீர்மானத்தை ஸிந்திபாஷையில் தர்ஜமா செய்தவராயும், பத்வாமூலப் பிரதியை எழுதியவராயும் இருக்கிறார்.

மௌல்வி நிஸார் அஹமத் என்பவர் பத்வாவின் இரண்டு பதிப்புகளிலும் கையெழுத்து வைத்தவர். ஜமைத்துல் உலேமாவில் சேர்ந்து நடவடிக்கை செய்தவர். கராச்சியில் கான்பிரன்ஸில் ஆஜராயிருந்து தீர்மானத்தைப்பற்றியும் பேசியவர்.

பாரதி கிருஷ்ண தீர்த்தஜி சேனைகள் ஸம்மந்தமாக தீர்மானத்தில் இருப்பது தெரியாதென்று சொல்லுகிறார். தீர்மானத்தின் கருத்து என்ன வென்று அறியாமல் ஒருவர் பேச முடியுமாவென்று கவனிக்க வேண்டும்.

ஷௌகத் அலியோ தீர்மானம் நிறைவேற்றின காலத்தில் ஆஜராகியிருந்தவர். கோக்காக்கில் பேசியவர். சிப்பாய்கள் வேலை நீங்கிவந்த பிறகு உதவும் நிதிக்கு வேலை செய்பவர்.

இவ்விடம் ஜட்ஜ் கூறியதாவது: எதிரிகளின் எண்ணம் ஒரு பெரிய கலகம் உண்டு பண்ணுமாறு ஏன் இருந்திருக்க வேணும்? கவர்ன்மெண்டாருக்கு கொஞ்சம் நெருக்கடியும் கஷ்டமும் உண்டு பண்ணி, தங்களாவது. கிரேக்கருக்கு உதவி செய்தாவது, சண்டையில் சேருவதை நிறுத்தி, நடுநிலையில் இருக்குமாறு செய்ய எண்ணங் கொண்டிருக்கலாமன்றோ?

சர்க்கார்வக்கீல்:— அப்படியிருந்த போதிலும் அவர்கள் குற்றவாளிகளே. அப்படிசெய்ய இஷ்டப்பட்டாலும் சட்ட விரோதமான தீர்மானங்களை நிறைவேற்றி பலவந்தப்படுதல் கூடுமோ?

ஜட்ஜ்:— அவர்களுக்கு ராணுவ லாக்காவில் பயப்பட வேண்டியதிருக்கிற தென்றும் தெரிவிக்க இவ்வாறு ஏன் செய்திருக்கக் கூடாது?

பிறகு சர்க்கார்தரப்பு வக்கீல் சாக்ஷிய சம்மந்தமாக இருக்கும் சட்டத்தை சொல்லி, அலகபாத்தி

லிருந்தும் கான்பூரிலிருந்தும் தபாலாபீசு மூலம் அனுப்பப்பட்ட துண்டுப்பத்திரிகைகளை பார்த்ததிலும் கான்பூரிலிருந்து ஒரு எதிரி வந்திருப்பதிலும் சதியாலோசனையின் அம்சம் விளங்குமென்றும் இன்னும்பலவாறு எடுத்துச்சொன்னார்.

இரண்டாவது குற்றம் சம்மந்தமாய் கவனிக்க வேண்டியது என்னவென்றால் தபாலில் சின்ன துண்டு நோட்டீசுகள் அனுப்பினவனே இங்கே எதிரியாக வர வேணுமென்ற அவசியமில்லை யென்றும் இச்சதியாலோசனையில் சேர்ந்த யாவனாயினும் இக்காரியம் செய்யின் மற்றவர்களும் அதற்குப் பாத்தியப்படுவார்களென்றும் எண்ணவேணும். எல்லோரும் ஒரு கருத்துடனும் ஒரு பிரயோஜனத்தை எதிர்பார்த்தும் செய்கைகள் செய்தார்களா என்று கருதவேணும். இச்சதியாலோசனையில் சேர்ந்தவர்கள் இக்காரியம் செய்திருக்கிறார்களா? இதற்கு எல்லா விஷயங்களிலிருந்தும் அனுமானிக்கவேண்டியது. எதிரியால் அசல் பத்வாவில் கைஒப்பம் வைக்கப்பட்டதாக ஒத்துக் கொள்ளப் படுகிறது. இவைகளால் எதிரிகளின் எண்ணம் வெளியாகிறது.

இவ்வாறு பலவிதமாய் எடுத்துக்காட்டி எதிரிகள் மேல் பெரியகுற்றங்கள் இருப்பவைகள் ஸ்தாபிக்கப் பட்டனவென்றும் அவைகளுக்கு தக்கபடி கவனித்து சட்ட அமுல்படி நடக்குமாறும் சொல்லி முடித்தனர்.

பிறகு முகம்மது அலி தனது கேஸைப் பற்றியும் தனது ஸ்டேட்மெண்டைப் பற்றியும் பேச ஆரம்பித்தார்.

இவர் தனது ஆர்க்குமெண்டு முழுவதையும் கொரூனின் உண்மையின்மேலேயே சுமத்தினர். கொரூன் எவ்வாறு செய்யவேணுமென்று கூறினதோ அவ்வாறு தான் செய்ததாக கூறினர். அவ்வாறு கொரூனின்படி செய்தல் தவறு என்று சாக்ஷிசொன்னல் விக்டோரியா மகாராணியாலும் எட்வர்டரசராலும் ஜியார்ஜ் மன்னராலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை வாப்சுசெய்துகொண்டதாக ஏற்படும்.

பிறகு கேசில் சர்க்கார் தரப்பில் ஆஜர்செய்த சாக்ஷியத்தையும் அதன் பிரயோஜன மின்மையையும் பற்றிக்கூறினர்.

பிறகு இரண்டாம் குற்றவிஷயமாய் ஜூரிகள் பார்த்து தாங்கள் முழுக்வனத்தையும் செலுத்துமாறு

சொன்னார். சண்டையில் சேரும் விதியைப்பற்றி பேசினார். கொருனைக்கொண்டு தீர்மானத்தின் மத சம்பந்தத்தை சொல்ல ஆரம்பித்தார்.

முகமதியர்களைச் சண்டையில் சேர்த்துக்கொண்டு வேறு முகமதியரை கொல்லச்சொன்னால் அவ்வாறு கொல்லுதல் கூடாதென்று கொருன் கூறுகிறது. ஒரு ஹிந்து எவ்வாறு ஒரு பசு ஹத்திசெய்வதில் மனநடுக்க முறுகிறானோ அவ்வாறு ஒரு முகமதியன் முகமதிய இரத்தத்தை சிந்த நடுங்கவேணும்.

தனது சார்பாக பேசுங்கால் வெகு கம்பீரமாயும் தங்குதடை யில்லாமலும் பேசினார். இவர் ஒரு வக்கீலாக இல்லாவிட்டாலும் ஒரு வக்கீலாக இருப்பவர் தனது கேசுக்கு எவ்வாறு பேசுவாரோ அதற்கு மேன்மையாகவே தன் கக்ஷியை எடுத்துரைத்தார். கிரிமினல் சட்டத்துப்படிக்கும் தனது மதக்கோட்பாடுப்படிக்கும் தாங்கள் செய்தது குற்றமாகாது என்று எடுத்துக்காட்டினார். அவர் கடைசியில் கூறியதாவது:—

இவ்வுலகம் கடவுளுக்குரியதேஒழிய ஜ்யார்ஜ் அர்சருக்காவது வேறு ஒருவருக்காவது உரியதன்று. ஜூரிகள் தங்கள் மனச்சாக்ஷியை கவனிக்கவேண்டும்.

தான் இயேசுகிறிஸ்துவைப்போல பேசிக்கொள்வதற்கும் பிறர் பேசுகிறதற்கும் எவ்வளவு கொஞ்சமும் யோக்கியதில்லையாயினும், தனது மதஸம்மந்தமட்டில் தன்னுற்செய்ததுதனதுமதத்தை யனுசரித்ததேயென்று சொல்லும் விஷயத்தையும் ஜட்ஜ் தன்னை விசாரணை செய்யும் விஷயத்தையும் மட்டும் எண்ணினல் இயேசு கிறிஸ்து பைலேட் என்னும் கவர்னர் முன் விசாரணையானது போலாகும். கடைசிகாலத்தில் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் அவர் மனிதர் செய்யும் கருமங்களுக்கு தக்கபடி தண்டனைகள் ஒரு காலம் விதிப்பார் என்றும் ஒவ்வொருவரும் எண்ணி, மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் என்ன சொன்னார் ஜட்ஜ் என்ன சொன்னார், சர்க்கார் தரப்பு வக்கீல் என்ன சொன்னார் என்று கவனிக்காமல் தனது மனச்சாக்ஷி என்ன சொல்லுகிறது என்றுமட்டும் கவனித்து முடிவிற்கு வருவீர்.

## கடைசியாக முகமத் அலி கூறியதாவது.

"நபியினது மருமகனும் பின்வந்த வருமான அலி மகக்குற்றம் செய்ததற்கு ஒரு யூதனைக் கொல்லும்படி நேரிட்டது, அவனை கொலை செய்யப்போகும் போது அந்த யூதன் அலியின் முகத்தில் எச்சில் துப்பி

ஞன். உடனே அலி கோபங் கொண்டாராயினும் அந்த யூதனைக்கொன்ருல் தனக்கு அவன் செய்த அவமரியாதைக்கு கொலை செய்ததாக ஏற்படுமென்று எண்ணினர். யூதனைக் கொல்லாமல் விட்டுவிட்டார். அந்த அலியைபோல யாரும் எனக்கு தீங்கு செய்தால் பிரதி தீங்கு செய்யேன். ஆனல் மதக் கோட்பாடு விஷயத்தில் யார் எக்குற்றம் செய்யினும் விடேன். அவன் என் சகோதரனுனலும் சரி என் மகனுனலும் சரி.''

*   *   *   *

முகம்மது அலி பேசி முடிந்தபிறகு அங்கு கூடியிருந்த கூட்டம் கலைய ஆரம்பித்தது.

மௌலான ஹுஸேன் அஹமத் கொருணிவிருந்து 15 வாக்கியங்கள் எடுத்துச்சொல்லி அர்த்தத்தில் முகம்மத் அலி கூறியவிதமே கூறினர். ஸ்வராஜ்யம் 4 மாதங்களிலடைய அவர்கள் வெளிப்பட்டிருப்பதாயும் இவ்வாறு மதக் கோட்பாடுபடி நடக்க ஒரு கேஸ் நடத்த கவர்ண்மெண்டு எத்தனித்திருப்பதில் ஒரே மாதத்தில் ஸ்வராஜ்யம் கிடைக்குமென்றும் சொன்னர்.

டாக்டர் கிச்லு உர்துவில் பேசினர். டிஸ்டிரிக்ட்டு மேஜிஸ்ட்ரேட் வந்ததால் தனது கேஸை கெட்டுவிட்டதாயும் கீழ்க்கோர்ட்டில் இந்த நடவடிக்கையில் நடந்த ஊழல்களையும் இன்னும் தான் எப்போதும் ராஜீயக் குழப்பந்தான் நன்மை பயக்கும் என்று எண்ணுபவ ரென்றும், அதனுல் எவ்வித தண்டனை விதித்தாலும் அதை மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும், சிறு அச்சுத் துண்டுகள் வெளிப்படுத்தின டில்லி இந்திய பப்ளிஷிங் ஹௌஸ் காரியதரிசியை எதிரியாக வைத்து மேல் நடத்தாமல் இருப்பது பிசகென்றும், தான் பலாத் காரமற்ற ஒத்துழை யாமையைக் கைக்கொண்டவ ரென்றும், கவர்ன்மெண்டு அடக்கு முறையை அதி கரித்தால் தான் பலாத்கார மான ஒத்துழையாமையை கைக்கொள்ளத்தயார் என்றும் சொல்லி முடித்தார்.

குரு சங்கராச்சாரியார் கோர்ட்டாரால் உட் கார்ந்து பேசுமாறு அனுமதி கொடுக்கப்பட்டு தன்னை கைது செய்யப்பட்டது முதல் காராச்சி கொண்டுவந் தது வரையிலும் சொல்லி, தான் முழுவதும் தர்ம உப தேசம் செய்து வருவதாயும் அப்படிச் செய்வதால் எவ் வித தண்டனை யடைந்தபோதிலும் மனத்திருப்தியுடன் ஏற்றுக் கொள்வதாயும் சொல்லி முடித்தார். தனக்கு

சர்க்கார் அதிகாரியால் கொடுக்கப்பட்ட மரியாதை யையும், ஸிந்துகமிஷனரால் கொடுக்கப்பட்ட அச்சு நோட்டீஸைப் பற்றியும் விஸ்தாரமாக சொன்னார்.

பீர்குலாம் மஜீத் ஸிந்திபாஷையில் முன் கூறிய வர்களைபோலவே பேசினார். தனது குடும்பத்தின் வரலாற்றைப் பற்றியும் தாங்கள் ஆப்கானிஸ்தானத்தி லிருந்துவந்த குடும்பத்தை சேர்ந்தவரென்றும் தனது முப்பாட்டனார் ஜிஹாங்கீர் காலத்தில் அவ்வரசரைக் கண்டு தலைவணங்காத காரணத்தால் கைது செய்யப் பட்டு காப்பில் வைக்கப்பட்டதாயும் பிறகு, அரசற்கு நல்ல புத்திவந்து விடுதலை செய்து மன்னிப்பு கேட்டுக் கொண்டதாயும், இவ்வாறு தனக்கு கெடுதல் செய்யும் பக்ஷத்தில் இந்த கோர்ட்டும் நல்ல புத்தியடைந்து மன் னிப்புக் கேட்கும்படி காலம்வருமென்று தான் நம்புவ தாயும், சொல்லி முடித்தார்.

மௌல்வி நிஸார் அஹமத் உர்துவில் சவிஸ்தார மாய் மற்றவர்களைப் போலவே பேசினார்.

ஷௌகத்அலி முன்போலவே தனது வேதமான கொருன் உபதேசங்களை சொல்லி கேஸின் தன்மை யையும் தனது கடமையையும் பற்றிக்கூறினார்.

இவ்வாறு எதிரிகள் எல்லோரும் தங்கள் கக்ஷியைப் பற்றி பேசியபின் ஜட்ஜும் ஜூரர்களுக்கு இக் கேஸின் விஷயமாகக்கூறினார்.

எதிரிகளில் இருவர் கூறினதுமாதிரி கீழ்க்கோர்ட்டில் மேஜிஸ்ட்ரேட்டார் செய்தது ஒழுங்குத்தவறு என்று தான் நினைக்கவில்லையென்றும், இதை கோர்ட்டில் குற்றப் பத்திரிகையில் துலக்கிய குற்றத்தைமாத்தினது சாதாரண விஷயமென்றும் அது ஒரு பெரிய பிசகாகாதென்றும், இந்த கோர்ட்டிலும் வக்கீல்களை வைத்து கேஸ் நடத்தினால் எவ்வளவு சலிகை காட்டப்படுமோ அதற்குமேலே இந்த எதிரிகளுக்கு காட்டப்பட்டதென்றும், சதியாலோஜனை, விஷயம் ருஜுபிக்கப்பட்டதா இல்லையா என்று முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டுமென்றும், அப்படி யிருக்கிறதென்றால் எதிரிகள் குற்றவாளிகளா இல்லையா என்று சொல்ல வேண்டியதென்றும், ராஜத்வேஷம் அல்லது ராஜ அவிச்வாஸம் என்னும் குற்றத்துக்கு எதிரிகள் பேரில் கேஸ் நடக்கவில்லையென்றும், ராஜ விச்வாஸம் அல்லது அவிச்வாஸம் இருந்து சதியாலோசனை இல்லையென்று அனுமானித்தால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டியதென்றும், இக்கேசு சம்மதமாய் நேரில்

சாக்ஷியத்தில் கேட்டதை தவிர்த்து பத்திரிகைகள் முதலியவைகளை நாம் படித்ததைக்கொண்டு தீர்மானத்துக்கு வரக் கூடாதென்றும், ஷௌகத்அலிதன் வேண்டுகோளுக்கு, கவர்ண்மெண்டார் இணங்காத பக்ஷத்தில் டிஜம்பர் மாதம் 31-ந்தேதிக்குமேல் நம்மையெல்லாரையும் உயிரை வாங்கிவிடுவதாய் பயமுறுத்தினதை நாம் கவனிக்கக் கூடாதென்றும், அதனால் நமது தீர்மானம் ஒரு வகைப்பட இருக்கக் கூடாதென்றும், சரியானபடி குற்றவாளியா யிருந்தால் நமதுஆயிளை ஒருவரும் குறைக்க முடியாதென்று எண்ணி தீர்மானம் சொல்ல வேணுமென்றும், குற்றவாளி யில்லாவிட்டால் அவர் பயத்துக்காக இல்லாமல் நியாயத்துக்காக விட்டுவிட்டோ மென்று எண்ணி தீர்மானம் சொல்ல வேணுமென்றும், சிலஎதிரிகள் மிகுந்தவைதீகர்களாயும் கல்விமான்களாயும் இருக்கிறார்களென்றும் சொன்னதுடன், துருக்கி ஆதியிலிருந்த ஸ்திதியையும் தற்காலஸ்திதியையும் பற்றியுள்ள அபிப்பிராயமும் தெரிவித்தார்.

பிறகு எதிரிகளின் கக்ஷிதாங்கள் மதக்கோட்பாட்டுக்காகவும், விக்டோரிய மகாராணியும் மற்றவர்களும் கொடுத்த அறிக்கைப் பத்திரங்களால் நியாயமென்று

சொல்லுகிறதையும், அறிக்கைப் பத்திரம் மத ஸ்வேச்சையைக்கொடுக்கிறதே யல்லாது, மதமெனும் காரணம் பற்றி மற்றவர்களுக் கெடுதல் உண்டுபண்ணக் கூடாதென்றும், "உன்னுடைய காரியத்தை அடுத்தவனுக்கிடைஞ்சலன்னியில் செய்துவர யாரும்தடைசெய்யார்" என்ற விஷயத்துக்கு கெடுதலுண்டாகக் கூடா தென்றும், கோடான கோடி சமபம் வருணம் நிறைந்த இந்த ஆங்கிலேயஸாம்ராஜ்யத்தில் எக்காரியம் எக்குற்றம் வேணுமென்றாலும் செய்து அது மதத்துக்குட்பட்டது என்று வெகுசுலபமாய் சொல்லி விடக்கூடியது என்றும், ஆதலால் நாகரீகத்தின் காரணம் பற்றி பல காரியங்களை குற்றமென்று சட்டமானது விதித்திருக்கிற தென்றும், அவைகளை அப்படியும் செய்தால் அதற்கு தீண்டனையுண் டென்றும், அவ்வாறு தண்டனையை விதிக்குமாறு சிலர்களை ஏற்படுத்திருக்கிறதென்றும் சொன்னார்.

இன்னும் காரச்சியில் நடந்த ஸம்பவங்களையும், 6-ம் எதிரியின் பேச்சை, அவ்விடம் ஜூரர்களுக்கு கொடுக்கப்பட்ட கன்பான்ஸ் ரிபோர்ட்டில் பார்க்க வேணுமென்றும், அதில் மொத்தமாய் மதத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல செய்யுமாறு பேசி யிருத்தலை கவனிக்குமாறும் சொன்னார்.

பிறகு சேனைகளை எவ்விதம் தாண்டினதாக சொல்லப்படுவதை வற்புறுத்தியும், காரச்சி தீர்மானம் அத்துண்டு நோட்டீசில் இல்லையென்றும், சதியாலோசனைக்காரர்களில் ஒருவரும் சேனைகளுக்கு தீர்மானத்தை அனுப்பாமல் கவர்ண்மெண்டுக்கு விரோதியான எண்ணங்கொண்ட ஒரு ஹிந்துவால்கூட அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும், பிறகு சட்ட விஷயம் எவ்வாறு இருக்கிறது என்றும், இந்நாட்டிலுள்ள சட்டப்படி பைசல் செய்யவேண்டியதே ஒழிய ஒவ்வொரு மதக்கோட்பாடுபடி தீர்ப்பு செய்யக் கூடாதென்றும் சொல்விமுடித்தார்.

ஜூரர்கள் எல்லோரும் இதைப்பற்றி கவனித்து ஆலோசனை செய்யக்கூடி கடைசியில் சிப்பாய்களை கலைக்குமாறு சதியாலோசனை செய்ததாயுள்ள குற்றமும், அவ்வாறு குற்றம் செய்த எத்தனம் செய்யும் குற்றமும், எதிரிகள் செய்யவில்லை என்று சொன்னார்கள். ஜட்ஜும் அங்கீகரித்தார்.

3-ம் சார்ஜான "ராஜாவின் சிப்பாய்கள் தங்கள் வேலையிலிருந்து விலகிக்கொள்ளுமாறு பேசிய பேச்சுக்கு" 4 ஜூரர்கள் 6-ம் எதிரியை தவிர்த்து மற்றோர்கள் குற்றவாளிகளென்றும், ஒருவர் இவ்வேழுபேர்

களும் குற்றவாளி இல்லையென்றும் சொன்னார்கள். ஜட்ஜ் அதின்படியே 6-ம் எதிரியை விடுதலை செய்து மற்ற எதிரிகள் குற்றவாளிகள் என்று அபிப்பிராயப் பட்டார். ஆதலால் 6-ம் எதிரியான பாரத கிருஷ்ண தீர்த்த ஜீயைத்தவிர்த்து மற்ற எதிரிகளை 2 வருஷ கடுங் காவல் சிக்ஷையடையுமாறு தீர்ப்பு செய்தார்.

பிறகு 117-வது பிரிவுப்படி உண்டான குற்றத் துக்கும் அதேவிதமாக இரண்டு வருஷகாவல் சிக்ஷத்தீர்ப்பு சொல்ல இவ்விரண்டு சிக்ஷகளும் சேர்ந்து நடத்துமாறும் தெரிவித்தார்.

* * * *

இவ்வாறு செய்யப்பட்ட விசாரணையும் முடிந்தது. அலி சகோதரர்களும் மற்றுள்ள நேசர்களோடு சிறைச்சாலையில் இருந்து காலங்கழித்து ஸ்வராஜ்யம் என்பது சமீபம்வந்து தங்களுடைய விடுதலை காலம் அணுகிவிடுமென்ற முழு நம்பிக்கையுடன் இருந்து வருகிறார்கள்.

000 090.

# SALE LIST OF ARTICLES.

---

## K. JAGADISAN & Co.,

**Stationers, General Merchants, Etc. Etc.**

**32, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.**

**Sell the foll. at Cheap rates.**

### STATIONERY.

1. Superior glazed square court Envelopes
2. Manilla
3. Writing Bank Paper Pads
4. Blue ruled Bank Paper packets of 100 sheets
5. Silver cross Letter paper
6. Sup. Bank large size note paper

---

**K. Jagadisan & Co**. Triplicane, Madras,

7. Sup. Ivory white note paper,
8. ,, Parchment ,,
9. Glazed plain post cards,
10. ,, Visiting cards
11. Foolscap papers in 8,9, 10, 12 & 14 lbs.
12. Brown papers
13. Asoka Brand Blotters Thick
14, Paper clips
15. Office Tags
16. Am. Star Dating Stamps
17. Br. made Self Inking Stamp pad
18. Floral Puspol Hair oil (B. C. P. W.)
19. Ben. C. P. W. Tooth powder
20. Agaru Perfumes (B. C. P. W.)
21. Eau de cologne
22. Quick curer for Itches, ulcers piles etc.
23. Sealing wax
24. Hose suspenders
25. Sheffield Superior Razors, Safety Razors blades etc.

Currency note cases :—

26. For 1 Re. and 2½ Rs. notes
27. For 10 Rs. notes

---

28. Leather Belts
29. Chalks Japanese
30. ,, American
31. Polished Solid Brass nutcrackers with fine steel blade
32. Tooth brushes
33. Safety Pins Rolled Gold English make
34. Mother of Pearl buttons 4 holed for shirts
35. ,, hook buttons for coats
36. Best Sheffield make double bladed knives

## WRITING MATERILAS.

37. Waterman's Ideal Fountain Pens
38. Swan Fountain pens
39. ,, Safety
40. Black bird Fountain pens
41. Hardware Fountain pens
42. Maharaja Safety ,,
43. ,, Screwtop ,,
44. Moore's Safety ,,
45. Alexandra ,,
46. Nickel clips

47. Pure Silver clips
48. Leather Pouches for Fountain pens
49. Am. Fides Pencils
50. ,, Maharajah pencils
51. Delhi Darbar ,,
52. A. W. Faber's Bavarian Drawing Pencils
53. ,, ,, Blue ,,
54. ,, ,, Red ,,
55. ,, ,, Copying ,,
56. Jap. Copying Sup. Pencils
57. Am. Venus Copying pencils
58. Venus pencil holders
59. Am Red & Blue combined pencils
60. Rowneys " Diana " Blue pencials
61. English make Propelling pencils
62. Am Pencil protectors with rubber tips
63. Genuine Kropp Razors
64. Rubber pieces (English erasers)
65. Rubber bands for holding and tying Records, books etc,
66. Am Pen holders
67. Ink erasers (for removing Inkstains from paper parchments, clothing, lace, linen etc complete in box

68. Swan Fountain Pen Inks
69. Fields ,,
70. Hollidges copying Inks
71. ,, superior Blue Black Ink in bottles
72. Ink Pills Blue black
73. ,, Red
74. ,, Green
75. Relief Nibs, Perrys Nibs, etc.,
76. Black or Red marking crayons

## SCHOOL REQUISITES.

77. Graph Books
78. Exercise Books of all pages ruled and unruled
79. Limp bound in all pages
80. Short hand note books 60 pages Superior Paper with red ruling
81. Pocket note books in various styles.
82. ,, Book case (calico)
83. Vest Pocket Books
84. Observation note Physics
85. Bound note 160 200, 240, 288, 320 pp.
86. Drawing Books
87. Card board

88. Math Insts English make
89. Water colours
90. Am colour crayons
91. Ind ,,

Drawing Pins, Kropp Paste, Safety Razors, spare blades, Chalks, Pens, Pencils, Books etc. at bottom prices.

A TRIAL ORDER WILL CONVINCE YOU.

---

**K. JAGADISAN & Co.,**
**32, Pycrofts Road,**
**Triplicane, MADRAS.**

---

# Athri's Ayurvedic Medicines.

We are selling the following gems of the Indian Pharmacopea with guarantee to return the amount if you get no benefit :—

1. "Ointment" A certain cure without operation for Piles, Sores, Sinus, Fistula, Syphilitic and obstinatesores etc., Price per phial Rs. 1-12-0.

2. "Amirtha-Tonic" An infallible cure for, Syphilis in all its stages, loss of flesh and strength, Debility and Poverty of the blood, General impurity of the blood, All skin diseases, Nervous prostration and loss of memory,

**K. Jagadisan & Co.** Triplicane, Madras,

Chronic constipation, Depression of the spirits, Torpidity of the liver, Weakness during convalescence, Acute or chronic gonorhœa, Gleet, Involuntary emission and want of natural desire etc., Per 8 oz. bottle Rs. 1-12-0.

3. "Ringworm cure" A miraculous cure for ringworm and kindred eruptions. Per phial As. 0-6-0.

4. "Ear drops" A safe remedy for earache and all diseases of the ear. Per bottle As. 10.

5. "Lalana Vilas" Hair oil. A medicated and sweetscented Braincooler. Per bottle Re. 1-0-0.

6. "Athri's Dentrifice" This contains no chalk. The Chief ingredients are medicinal herbs and barks. The use of this powder will

make the teeth pearl like. Being antiseptic it prevents the inroads of caries and tooth ache. It strengthens the gums and adds a delightful odour to the mouth.

(7) "Best Omum Water." A house hold requisite for all stomach disorder. Aboon to children. All must use, Strong and Pure. Per Bottle of 12 ounces as 4.

Our Big wall calendars for 1922 with "Lakshmi" or "Saraswati" painted in art colours. Size 20″ × 10″. As 10. Picture alone costs 10 As.

Agents wanted. Liberal terms for trade. Apply for particulars with 2 As. stamps.

---

The cheapest house in Madras for all Fountain pens, School Exercise, Graph,

Drawing etc., Books, Bound note books, students' requisites, Writing papers, Pen-holders, Pencils, Penknives, Nibs, erasers, blotters, Mathematical instruments, Fountain Pen Inks, Writing fluids, Letter Papers, covers, Letter pads, Blotting pads, Krementz one piece Buttons, Hair oils, soaps, Perfumes Kropp Razors etc. is

**K. Jagadisan & Co. Triplicane.**

**Best German Clinical Thermometers** (½ minute magnifying). Per dozen Rs. 14; 6 at a time Rs. 7-8-0 ; 3 at a time Rs. 4 ; each Rs. 1-8-0. **Zeal English ½ minute Thermometers** Per doz Rs. 33 ; 6 at a time Rs. 17 ;3 at a time Rs 9; each Rs. 3-4-0.

**K. Jagadisan & Co. Triplicane.**

The above medicines will be had from our agent.

**R. Venkatramulu Naidu,**
**41, Kalla Street.**
**Kothaval Chavadi,**
**Trichy.**

# அத்திரியின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

---

குணமில்லாவிடில் விலையை வாப்ஸ் செய்யப்படும்.

---

இம்மருந்துகள் கல்குத்தாவில் டாக்டர் குப்தாவால் தயாரிக்கப்பட்டன.

(1) "அற்புதமெழுகு" எவ்வகை மூலம், சொறிகள், பௌந்தரம், கட்டிகள், மேகப்பத்துகள், கெட்டசீக்கினல் உண்டான புண்கள், ரணங்கள் வகையறுவை ஆப்ரேஷன் இல்லாமலே ஸ்வஸ்தமாக்கும், புட்டி 1-க்கு விலை, ரூ. 1-12-0.

---

**K. Jagadisan & Co.** Triplicane, Madras.

(2) "அமிர்த டானிக்" ஆண், பெண், வாலிபர், வயோதிகர் யாவரும் உபயோகிக்கலாம், இரத்தக்குறைவு, அசுத்த ரத்தம், பலகீனம், கை கால் அசதி, தேகமெலிவு, நீர்த்தாரை, எரிச்சல், தாது புஷ்டிக்குறைவு, அஜீரணம், மலச்சிக்கல், பித்தகுன்மம், பித்தவாயு, நியாபக சக்தியின்மை, முதலிய வியாதிகளை கண்டித்து, நரம்புகளுக்கு வலுவை கொடுத்து, தாது புஷ்டியளித்து இரத்த விர்த்தியையுண்டாகும் 8 அவுன்ஸ் பெரிய புட்டி 1-க்கு ரூ. 1-12-0.

(3) "படைஸம்ஹாரி" எவ்வகை படைகள், அரைகடிகள், சொறிகள், படர்தாமரை, முதலியவைகளை கண்டிக்கும். புட்டி 1-க்கு விலை அணு 6.

(4) "காது தைலம்" காதுவலி, குத்து, சீழ்வருதல், காதடைப்பு முதலியவைகளை கண்டிக்கும். புட்டி 1-க்கு அணு 10.

(5) "லலனவிலாஸ்" ஹேராயில். மூளைக்கொதிப்பை யடக்கி குளிர்ச்சி செய்து தலை முடிக்கும் அழகு அளிக்கும் ஆனந்தவாஸனையுள்ளது புட்டி 1-க்கு விலை ரூ. 1-0-0.

(6) 'அத்ரி பல்பொடி' சாக்கட்டி இதில் சேர்க்கப் படவில்லை. மருந்து மூலிகைகளும் கருவேலம் பட்டை, கலநார்,

முதலிய மருந்து சரக்குகளுமே உபயோகிக்கப் பட்டுள்ளது. இதை உபயோகித்தால் பல் வெளுப்பாவதுடன், வாய் நாற்றம், பல் வலி, ரத்தம் வருதல், முதலியவைகளை நிறுத்தி பல்லுக்கு பலத்தை யுண்டாக்கும். டப்பி 1 க்கு அணு 3.

(7) 'உயர்ந்த ஓமவாட்டர்' வெகு ஜாக்கிரதையுடன் சுத்தமாயும் காட்டமாயும் செய்யப்பட்டது. வயிறு உப்பிசம், அஜீரணம், மலப்போக்கு முதலியவைகளுக்கும் கைக்குழந்தை, சிறுவர் சிறுமிகளுக்கு கை கண்டது. ஒவ்வொரு வீட்டிலும் அவசியமாய் இருக்கவேண்டியது. விலை 12 அவுன்ஸ் புட்டிக்கு அணு 4.

ஏஜண்டுகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் நகரங்களிலும் தேவை. இரண்டணு ஸ்டாம்பு அனுப்பி விபரம் தெரிந்து கொள்ளவும்.

1922-ம் வருஷத்திய சித்திரத்துடன் கூடிய காலெண்டர். 'லக்ஷிமி' அல்லது 'ஸரஸ்வதி' படம் போட்டது. 20 அங்குலம் நீளம் 10 அங்குலம் அகலம். விலை அணு 10. படம் மட்டுமே அணு 10பெறும்.

**தர்மாமிட்டர்கள் ஜர்மன் ½ நிமிஷம், பெரிதாய்க் காட்டும் வகை. ஒரு தடவைக்கு 12 வீதம் எடுத்தால் ரூ. 14; 6 வீதம் ரூ. 7-8-0; 3 வீதம் ரூ. 4; ஒன்றுக்கு ரூ. 1-8-0.**

---

ஸீல் இங்கிலீஷ் ½ நிமிஷம் தர்மாமிட்டர்கள் ஒரு தடவைக்கு 12 வீதம் ரூ. 33 ; 6வீதம் ரூ. 17 ; 3 வீதம் ரூ. 9 ; ஒன்றுக்கு ரூ. 3-4.0.

சகல பௌண்டென் பேனாக்கள், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய எக்ஸர்ஸைஸ் புத்தகங்கள், கிராப் நோட்டுகள், டிராயிங் நோட்டுகள், காய்தம், பென்சில், பேனா, நிப்புகள், கணக்கு கருவிகள், கலர்க்குச்சிகள், ரப்பர்கள், பௌண்டு பேனாஇங்கிகள், இங்கிமாத்திரைகள், லெட்டர் பேபர், ரப்பர் ஸ்டாம்புகள், வெள்ளி கிளிப்புகள், கிராப் கத்திகள், ஹோரா யில், ஸோப்புகள், முதலியவைகள் விலை ஸாஸமாய் விற்கிறோம்.

வியாபாரிகளுக்கு மொத்தமாயும் கொடுக்கிறோம். வேண்டியவைகளின் விலையை எழுதிக் கேட்கக் கோருகிறோம்.

**K.** ஜகதீசன் கம்பெனி,
திருவல்லிக்கேணி,
சென்னை.

மேற்கண்ட மருந்துகள் எங்கள் ஏஜண்டான அடியிற் கண்டவரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

**R.** வேங்கட்டராமலு நாயுடு,
**41,** கள்ள தெரு,
கோத்தவால்சாவடி, திருச்சி.

# SOLAAQUIN.

**An invaluable Specific for Asthma**

Most efficacious in all Catarrhal affections of the lungs, Trachea, Bronchial Tubes and pain in the Chest.

Prepared by the Kalpaka Medical Bureau Price Rs. 2 for a Box of 32 Pills.

**Sole agents for Tanjore, Trichy and Madura Dts:**

**K. JAGADISAN & Co.** **Triplicane, Madras,**

---

இழுப்பு நோய்க்கு கைகண்ட ஔஷதம் :

" ஸோலாக்யின் "

கல்பக வைத்திய சாலையில் தயாரிக்கப்பட்டது.

இருமல், இழுப்பு நோய், காசம், மார்ச்சளி முத
லிய வியாதிகளை கண்டிக்கும்.

தஞ்சை, திருச்சி, மதுரை ஜில்லாக்களுக்கு ஏஜண்டு

**K.** ஜகதீசன் கம்பெனி, திருவல்லிக்கேணி.

எங்கள் திருச்சி சப் ஏஜண்டு.

**R.** வெங்கட்டராமுலு நாயுடு,

**41,** கள்ளர் தெரு கொத்தவால் சாவடி, திருச்சி.

# IF YOU WANT

to get anything in

**Printing, Publishing, Book binding, Ruling, Stamp making, Engraving**

lines, Kindly have themin

## THIRUPURASUNDARI & Co.

# NOBLE PRESS

***Printers, Publishers, Book Binders, Rulers, Rubber Stamp makers, Engravers,***

***etc., etc., etc.,***

Our Ærated Water

Lables Printing---a Speciality

*Address :*

*1-21 Khanabagh Street.*

*Triplicane, Madras.*

6/i/2n

